## கமெண்ட் கந்தர்...

நத்தார் வாழ்த்தெல்லாம் நல்லாத்தான் இருக்குது.. ஆனால்...




# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 133 குரோதி வருடம், மார்கழி மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை
(25.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 23, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12


## உஷ்



கோட்டாபய ஆட்சிக்காலத்தில் படை அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட தளபதிகள் பலர் இந்த மாதத்துடன் ஓய்வு பெறுகின்றனர்.

இவர்களில் சிலர் ஏற்கனவே சேவை நீடிப்பில் உள்ளனர். இந்த ஆட்சியின் கீழ் சேவை நீடிப்பை வழங்க அரச மேல்மட்டம் மறுத்திருப்பதாக தகவல். சவேந்திர சில்வா, இராணுவத்தளபதி விக்கும் லியனகே, கடற்படைத்தளபதி பிரியந்த பெரேரா, விமானப்படைத் தளபதி உதேனி ராஜபக்ஷ ஆகியோரே ஓய்வில் செல்லவுள்ளனர்.





# விவசாயிகளுக்கு நட்டஈடு

## அதிகபட்சம் ரூ. ஒரு இலட்சம் வழங்கத் தீர்மானம்

» 04 பக்கம்

## 'தமிழன்' வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு இனிய நத்தார் தின வாழ்த்துகள்...



# அழகான நாட்டுக்காக உறுதிபூணுவோம்

## நத்தார் தின வாழ்த்தில் ஜனாதிபதி



''வலுவான மற்றும் நிலையான பொருளாதாரம், சமூக நீதியை இலக்காகக்...

» 02 பக்கம்

## உலக நல்லிணக்கத்துக்கான திருநாளாகட்டும்

### பிரதமர் நத்தார் வாழ்த்து



நத்தார் பண்டிகை தவறுகளை மன்னிக்கவும் சமரசம் செய்யவும் நினைவூட்டுகிறது. ஆகவே, எமது குடும்பங்கள்...

» 02பக்கம்

## இலங்கைக்கு மேலும் தரமுயர்வு வழங்கிய மூடிஸ்

சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனமான மூடிஸ் நிறுவனம், நீண்டகால வெளிநாட்டு நிதி வெளியிடும் தரப்படுத்தலில் இதுவரை இலங்கை இருந்துவந்த Ca மட்டத்திலிருந்து மேலும் உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் Caa 1 மட்டம் வரை தரமுயர்த்தியுள்ளது.

இலங்கை கடந்த வாரம் 12.55 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன் தொடர்பில் கடன் உரிமையாளர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்து இந்த த்தரப்படுத்தல் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. அதற்கமைய, இந்த நிலைமையுடன் இலங்கை தொடர்பில் இருக்கும் வெளிப்புற எச்சரிக்கைக்குள்ளாகுதல் மற்றும் அரச அசமந்தப்போக்கு தொடர்பான எச்சரிக்கை நிலை குறைவடைந்துள்ளதாகவும் நிதி மற்றும் கடன்...

» 02 பக்கம்

# லயன் வாழ் மக்களை வெளியேற்ற முயற்சி



## தோட்ட நிர்வாகங்களுக்கு உடன் தடை விதிக்கக்கோரி ஜனாதிபதி அநுரவுக்கு மனோ எம்.பி. அவசர கடிதம்

» 02பக்கம்

## நத்தார் தினத்தில் அன்பால் இணைவோம்

### எதிர்க்கட்சி தலைவரின் வாழ்த்து



எமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி...

» 02 பக்கம்

# அரிசி விநியோக செயற்பாட்டில் நெருக்கடி

## விலை குறைப்பு ஏற்படாதெனவும் அரசாங்கம் அறிவிப்பு



அரிசிக்கான நிர்ணய விலையில் எந்தத் திருத்தமும் தற்போதைக்கு ஏற்படாது என்றும் தற்போது நிர்ணய விலையுடன் விநியோக நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது தொடர்பிலேயே அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சகல பிரச்சினைகளுக்குமான தீர்வு கிடைத்ததன் பின்னர் முதலாவது சந்தர்ப்பத்திலேயே அரிசிக்கான...

» 02 பக்கம்






## நிதி பெற்றுக்கொண்டதை தயாசிறி ஏற்க வேண்டும்

### சேறு பூச வேண்டாமென நளிந்த தெரிவிப்பு



''ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்டவர்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியலிலுள்ள ஏனையவர்கள்...

» 02 பக்கம்






»03 பக்கம்






# அரசுக்குச் சொந்தமான சொகுசு வாகனங்களை விற்க நடவடிக்கை

## மார்ச் 31க்கு முன்னர் நிறைவுசெய்யுமாறு அறிவித்து சுற்றுநிருபம்

அரசாங்கத்துக்கு சொந்தமான சொகுசு வாகனங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு திறைசேரியின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தனவினால் சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த சுற்றுநிருபம் திணைக்களத் தலைவர்கள், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள், அரச வங்கிகள் மற்றும்...

» 02 பக்கம்

# அரச பணியாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு இடம்பெறும்

## பட்ஜெட்டில் யோசனை முன்வைக்கப்படுமென தொழில் அமைச்சர் அறிவிப்பு

அரச பணியாளர்களுக்கான சம்பள அதிகரிப்பை அடுத்த வருடத்தில் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும் என்றும் சம்பள அதிகரிப்பு தொடர்பான விடயங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் வெளியிடப்படுமென்றும் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (24) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களின் ஆணைக்கமைய எங்களுக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. அந்த சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க இந்த குறுகிய காலத்தில் வெற்றிகரமாக ஏற்றுக்கொண்டுள்ளோம். ஜனாதிபதியின் தலைமைத்துவத்திலான தேசிய மக்கள் சக்தியின் இந்த அரசாங்கம் நாட்டிலுள்ள நிலைமைகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்து வருகிறது என்பது மக்கள்




நன்கறிவார்கள்.

நாங்கள் பொறுப்பேற்கும்போது நாட்டில் இருந்த நிலைமைக்கமையவே பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். இருந்தபோதும் அநேகமானவர்கள் குறிப்பாக எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டு வருகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தவே முயற்சித்தார்கள். அதற்கு மாறாக செயற்பட்டு நாட்டில் ஸ்திரத்தன்மையை உருவாக்கியுள்ளோம். முதலீட்டாளர்களும் ஸ்திரத் தீர்மானத்தில் இருக்கிறார்கள். சர்வதேச அமைப்புகளும் இலங்கை தொடர்பில் ஸ்திரமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன. எங்களின் தீர்மானங்களின் நன்மையான விளைவுகளை 2025 ஆம் ஆண்டில் மக்கள் உணர்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்க நாங்கள் தயாராக இல்லை. தற்போது மக்களுக்கு கிடைக்கும் சம்பளத்தை கொண்டு வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாது என்பதை அறிந்தே வைத்துள்ளோம். அவர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். இருந்தபோதும் எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால் தற்போது சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியாது. 2026 இல் சம்பள அதிகரிப்பை மேற்கொள்கிறோம் என்ற கருத்தாடலையும் ஏற்படுத்தவும் முடியும்.

ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யப் போவதில்லை. கட்டாயம் சம்பள அதிகரிப்பை எதிர்பார்க்கப் கூடியதாக இருக்கும். சம்பள அதிகரிப்பு தொடர்பான விடயங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் வெளியிடப்படும் என்றார்.

# யாழில் வியாபாரத்தில் நஷ்டம்; உரிமையாளர் உயிர்மாய்ப்பு!

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் புகைப்பட நிறுவனம் ஒன்று நஷ்டமடைந்தமையால் அதன் உரிமையாளர் நேற்று முன்தினம் (23) தவறான முடிவெடுத்து தூக்கிட்டு தனது உயிரை மாய்த்துள்ளார்.

இதன்போது கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த புலவர் ரமேஷ்குமார் (வயது 43) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் மரணச் சடங்கு ஒன்றுக்கு சென்றுவிட்டு இரவு 10.30 மணிக்கு வீடு திரும்பியுள்ளார். வீடு வந்தவர் மேல் மாடிக்கு சென்றுள்ளார். இந்நிலையில் அவரது மனைவி இரவு 11 மணியளவில் உணவு கொண்டு சென்றவேளை அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

பின்னர் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## அரிசி...

விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. நாட்டுக்கு போதுமானளவு அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும் சந்தைகளுக்கு அரிசியை விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விநியோக நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்களுடனான சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

உர நிவாரண விநியோகத்தில் ஏற்பட்டுள்ள காலதாமதம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இந்த நிவாரணம் மக்களுக்கு கிடைக்கும்போது ஏற்படும் ஒருசில குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்பதால் நிச்சயமாக விரைந்து இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்.

அரிசி ஆலைகளிலுள்ள ஓரளவு அரிசி தொகை சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, அமைச்சரவை தீர்மானத்துக்கமைய 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய தனியார் துறையினருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில் நாட்டுக்கு 70,000 மெற்றிக் தொன் வரையிலான அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. துறைமுகத்திலுள்ள எஞ்சிய கொள்கலன்களும் சந்தைக்கு விடுவிக்கப்படும். பயன்பாட்டுக்கு தேவையான அரிசி கிடைக்கின்றபோதும், அவற்றை சந்தைக்கு விநியோகிக்கும் செயற்பாடுகளில் சிக்கல் இருக்கிறது.

சதொச மாத்திரமல்லாமல் தனியார் துறையினரும் விநியோக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்கள். எனவே, விநியோக நடவடிக்கைகளின்போது இடம்பெறும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் ஓரளவு தலையிட்டுள்ளது. அதனை அரசாங்கத்தால் முழுமையாக நிவர்த்தி செய்ய முடியாது. ஆனால், சதொச மற்றும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினூடாக கொண்டுவரும் அரிசியை விநியோகிப்பதற்கும் தனியார் துறையிடம் அரிசியை கொள்வனவு செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதனூடாக விநியோக பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அரிசி இறக்குமதி நடவடிக்கைகளை ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடிப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, தேசிய உற்பத்தியாளர்களின் அரிசி சந்தைக்கு விநியோகிக்கப்படும் போது இந்தப் பிரச்சினைக்கு தீர்வுக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

இறக்குமதி செய்யப்பட்ட 75,000மெற்றிக் தொன் அரிசிக்கான தரம் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. அந்த அரிசி தொகையை திருப்பி அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நுகர்வுக்கு பொருத்தமற்ற அரிசியை நுகர்வதற்கு இடமளிக்க மாட்டோம். அது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்டாலும் தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்பட்டாலும் அரிசிக்கான தரம் தொடர்பான பொறுப்பை அரசாங்கம் ஏற்கும். இறக்குமதி செய்யப்படும் அரிசி தொகை மற்றும் தேசிய சந்தையிலிருந்து கிடைக்கும் தொகையை வைத்தே அரிசிக்கான விலைக் குறைப்பு தொடர்பில் தீர்மானிக்க முடியும். இருந்தபோதும் நிர்ணய விலையில் எந்த திருத்தமும் ஏற்படாது. அதற்கான கலந்துரையாடல்களும் இல்லை. அரிசி விநியோகம் தொடர்பிலேயே சவால் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிர்ணய விலையுடன் விநியோக நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது தொடர்பிலேயே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே அரிசிக்கான விலையை குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## நிதி...

ஒப்புக்கொண்டதை போன்று, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவும் நிதி பெற்றுக்கொண்டதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் மற்றையவர்கள் மீது சேறுபூசல் செய்யக் கூடாது'' என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''2005ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டுவரை ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதிப் பெற்றுக்கொண்ட ஒருசில அரசியல்வாதிகளின் பெயர்ப்பட்டியலை மாத்திரமே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். இன்னுமொரு பெயர்ப்பட்டியலும் என்னிடம் இருக்கிறது. மாகாண சபை உறுப்பினர்கள், ஆளுநர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பெயர்களும் இருக்கின்றன.

2005ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்றவற்றையும் வெளியிடுவோம். ஜனாதிபதி செயலகத்தில் சகல ஆவணங்களையும் தேடிக் கண்டுபிடிப்பது இலகுவான விடயமாகும். தயாசிறியை தவிர்ந்த ஏனையவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த நிதியை பெற்றுக்கொண்டதாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

தயாசிறி மாத்திரமே வெவ்வேறு கருத்துகளை முன்வைத்து வருகிறார். சேற்றில் விழுந்த பன்றி வெளியில் வந்து நன்னீரில் சுத்தம் செய்து கொள்ள முயற்சிப்பதில்லை. தனது உடம்பிலுள்ள சேற்றை வேறு இடங்களில் பூசிவிட்டே செல்லும். அவ்வாறான பணிகளையே தற்போது முன்னெடுத்து வருகிறார்கள். ஜனாதிபதி நிதியத்தில் எவ்வளவு பணம் பெற்றார் அல்லது வேறு நிதியங்களில் பணம் பெற்றுக்கொண்டாரா, காப்புறுதி செய்தாரா? போன்ற விடயங்களை தயாசிறி வெளியிட வேண்டும். மாறாக எங்களை எச்சரிப்பதில் பயனில்லை. இதில் குழப்பமடையவேண்டிய அவசியமில்லை. ஏனையவர்களைபோன்று ஜனாதிபதி நிதியத்தில் பணம் பெற்றுக்கொண்டதை தயாசிறி ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லை என்று மறுக்க வேண்டும்'' என்றார்.

## இலங்கைக்கு...

நிலைபேறு தன்மை தொடர்பில் சிறந்த போக்கு தென்படுவதாகவும் மூடிஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் நீண்டநாள் வெளிநாட்டு நிதிகடன் தரப்படுத்தல் கடன் விடுபடல் மட்டத்திலிருந்து CCC+ மட்டம் வரை உயர்த்துவதற்கு மூடிஸ் நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## உலக...

சமூகங்கள் மற்றும் பரந்த உலகுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக இந்த நத்தார் தினம் அமையட்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும், இந்த மகிழ்ச்சியான பருவத்தை கொண்டாடும் இந்த தருணத்தில், கிறிஸ்மஸ் ஒற்றுமை, நன்றியுணர்வு மற்றும் அமைதி ஆகியவற்றின் உண்மையான சாராம்சத்தைப் பற்றி சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்குவோம். எமது தேசத்துக்கான மாற்றம் மற்றும் மீளமைப்பதற்கான இந்த நேரத்தில், குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பெறுமதிமிக்க நேரத்தை செலவிடுவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. ஒன்று கூடுவதும் உணவைப் பகிர்ந்து கொள்வதும் ஒருவரையொருவர் ஆதரிப்பதும் எமது பந்தங்களை மட்டுமல்ல, நம் நெகிழ்ச்சியையும் பலப்படுத்துகிறது.

ஆரோக்கியமான சமூகத்தையும் வலிமையான நாட்டையும் கட்டியெழுப்புவது வீட்டிலிருந்து தொடங்குகிறது என்பதை இந்த தருணங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. இந்த பண்டிகைக் காலத்தில் தங்கள் அன்புக்குரியவர்களுடன் இருக்க முடியாதவர்களையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம். நம் நாட்டுக்குள்ளும் வெளிநாட்டிலும் வீட்டிலிருந்து வெகு தொலைவில் பணிபுரிபவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களை ஆதரிப்பதற்காகவும் எங்கள் சமூகத்தை நிலைநிறுத்தும் அத்தியாவசிய சேவை ஊழியர்களுக்கும் நன்றி.

நாம் பண்டிகையை கொண்டாடும் வேளையில், குழந்தைகள் உட்பட எண்ணற்ற பொதுமக்கள் கொல்லப்படும் தொடர்ச்சியான மோதல்களால் குழப்பமடைந்த உலகில் அமைதிக்கான நம்பிக்கையை நம் இதயங்களில் சுமந்து செல்வோம். நத்தார் பண்டிகை நம்மை பிரதிபலிக்கவும் மன்னிக்கவும் சமரசம் செய்யவும் நினைவூட்டுகிறது என்பதுடன் எமது குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் பரந்த உலகுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக அமையட்டும். எமது மகிழ்ச்சியுடன் பாதுகாப்புக்கும் முன்னுரிமை கொடுப்போம். விழிப்புடன் இருப்பதன் மூலமும் பொறுப்பான தெரிவுகளைச் செய்வதன் மூலமும் நம்மையும் மற்றவர்களையும் பாதுகாத்துக்கொள்வோம். தொடர்புகளை வளர்த்துக்கொள்ளவும் பின்னடைவை உருவாக்கவும் ஒற்றுமை மற்றும் புரிதலுக்கு உறுதியளிக்கவும் இந்த பண்டிகை நம்மை ஊக்குவிக்கட்டும். உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்! என்று குறிப்பிட்டுள்ளார்.

## அரசுக்கு...

அரசுடைமை நிறுவனங்களின் தலைவர்களுக்கு இந்த சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 02ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது எட்டப்பட்ட தீர்மானத்துக்கமைய, தங்களின் அதிகாரத்தின் கீழ் அரசாங்கத்துக்கு சொந்தமான வாகனங்களை விற்பனை செய்ய முடியும் எனவும் அரச நிறுவனத் தலைவர்களுக்கு திறைசேரியின் செயலாளர் அறிவித்துள்ளார். நிறுவனத்தின் வாகனத் தேவையை மதிப்பிட்டு, பயன்படுத்துவதற்கு சிக்கனமற்ற, நிறுவனத்தின் பயன்பாட்டுக்கு தேவையற்ற வாகனங்களை அரசாங்கத்தின் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவல்கள் நிதியில்லாத ஆதன முகாமைத்துவ முறையில் எதிர்வரும் மார்ச் 01ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இயைபு முறைக்குறியீட்டுத் தலைப்பு (H S Heading) 87.03 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இயந்திரக் கொள்ளளவு 1800 CC இனை விஞ்சிய பெற்றோல் வாகனங்கள், இயந்திர கொள்ளளவு 2300 CC இனை விஞ்சிய டீசல் வாகனங்கள் சகலவற்றையும் விற்பனை செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், டபள் கெப்ஸ், சிங்கள் கெப்ஸ், வேன்கள், பஸ்கள், லொறிகள் மற்றும் டிரக்குகள் என்பவை இதில் உள்ளடங்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்த வாகனங்களின் தொடர்புடைய விவரங்களின் பிரதிகளை ஒவ்வொரு நிறுவனமும் எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வாகன விற்பனை மூலம் கிடைத்த வருமானமும் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அழகான...

கொண்ட உண்மையான அரசியல் கலாசாரம் மற்றும் மனிதநேயம் மற்றும் சுதந்திரம் நிறைந்த ஒரு அழகான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதிபூணுவோம்'' என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவரின் நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும்,

இயேசு கிறிஸ்து பிறந்த தினமான நத்தார் பண்டிகையை உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் கோலாகலமாக கொண்டாடி வருகின்றனர். துன்பத்தில் இருந்து அனைவரையும் காப்பாற்ற இவ்வுலகில் அவதரித்த இயேசு கிறிஸ்து, ஒருபோதும் ஏழை, பணக்காரன் என்ற கண்ணோட்டத்தில் மக்களைப் பார்த்ததில்லை. அதனால்தான் அன்னார் கடவுளின் குழந்தையாக இவ்வுலகில் பிறந்த நாளில் மிகவும் ஏழ்மையான மற்றும் அப்பாவி மனித சமூகமாக இருந்த மேய்ப்பர்களிடையே பிறக்கத் தேர்ந்தெடுத்தார். இவ்வாறாகத் தான் தேவதூதர்கள் அவர்களுக்கு நற்செய்தியை கொண்டு வந்தார்கள்.

எனவே, நத்தார் தினத்தின் அடிப்படை அர்த்தம், இன, மத, பேதங்களை ஒதுக்கி மனிதநேயத்தின் பெயரால் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் செயற்படுவதாகும். நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தமான அமைதியின் பின்னணியில் இருந்து இந்த நத்தார் பண்டிகையை கொண்டாடி வருவதை உளப்பூர்வமான மகிழ்ச்சியுடன் இங்கு குறிப்பிடுகிறோம். சகல மக்களும் ஒன்றாக ஒரே நோக்கத்துடன் கூட்டுப் பொறுப்பாகக் கருதி நாட்டின் எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்த ஒரு காலகட்டத்தை நாம் அடைந்துள்ளோம்.

அமைதி மற்றும் நல்லிணக்கத்தினால் பிணைந்து பூமியில் ஒரு புதிய விடியலின் அரவணைப்பை நாங்கள் அனுபவித்து வருகிறோம். அந்த பிரகாசமே இயேசு நமக்குக் கொண்டுவந்த அன்பின் விடியலாகும். பிரிவினையின் இருளில் இருந்து விலகி அமைதியுடன் ஆட்சி செய்யும் தோழர்களின் பூமியாக எமது நாடு படிப்படியாக மாற்றப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மனித சுதந்திரம் மற்றும் நீதியின் அடிப்படையில் இயேசுநாதர் செய்த போராட்டத்தின் காரணமாக அவர் புனிதரானார். அந்த மனிதாபிமான சுதந்திரம் மற்றும் நியாயத்தை மதித்து அவருடைய வழிகாட்டுதலை உண்மையாக்க ஒரு அரசாங்கமென்ற வகையில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று இலங்கைக்குத் தேவையான சமூக மாற்றம் என்பது பாரியதொரு சமூக மாற்றமாகும். சுதந்திரமடைந்து 76 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு சில துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அப்பாற்பட்ட முழு சமூக மாற்றமாகும். இது ஒரு மறுமலர்ச்சியாகும். அந்தத் தேசிய மறுமலர்ச்சிக்காக மிகுந்த அர்ப்பணிப்பு, பொறுமை, நிதானம், அடங்காத துணிச்சல், இடையறாத முயற்சியுடன் பணியாற்றும் எமது அரசைச் சுற்றி திரண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் எந்த வகையிலும் வீழ்ச்சியடைய விடாது அவர்கள் எதிர்பார்க்கும் வளமான நாடு- அழகான வாழ்க்கையை உருவாக்கும் ஒரே குறிக்கோளுடன், மென்மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் என்னை அர்ப்பணிப்பேன் என்பதை புனித நத்தார் தினத்தில் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

சுயநலம் மற்றும் தீங்கான போட்டிக்குள் சமூக கட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளபோதும், கிறிஸ்மஸில் வெளிப்படுத்தப்படும் மனித பண்புகளை வளர்த்து, சமத்துவத்தை மதித்து, மற்றவர்களுக்கு மரியாதை செலுத்துவதன் மூலம், சகோதரத்துவத்தையும் சகவாழ்வையும் மதிப்பதன் மூலம், அந்த சமூக கட்டமைப்பை நல்வழிப்படுத்தி மகிழ்ச்சிகரமான சமூகமொன்றுக்காக பிரஜைகள் என்ற வகையில் நாம் அனைவரும் கைகோர்க்க உறுதி பூணுவோம். வலுவான மற்றும் நிலையான பொருளாதாரம், சமூக நீதியை இலக்காகக் கொண்ட உண்மையான அரசியல் கலாசாரம் மற்றும் மனிதநேயம் மற்றும் சுதந்திரம் நிறைந்த ஒரு அழகான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதிபூணுவோம். இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்! என்று குறிப்பிட்டுள்ளார்.

## லயன்...

சுமார் 200 வருடங்களாக, தலைமுறை தலைமுறையாக லயன் குடியிருப்புகளில் வாழும் அப்பாவி ஏழை மக்களை தோட்ட நிர்வாகிகள் பல காரணங்களைச் சொல்லி வெளியேற்ற முயல்கிறார்கள். ஏற்கனவே நிர்க்கதி நிலையில் வசிக்கும் மக்களை வெளியே போகச் சொன்னால் அவர்கள் எங்கே போவார்கள்? தற்போது, இரத்தினபுரி, எஹலியகொட சன்டர்லேன்ட் தோட்டத்தில் இத்தகைய முயற்சி நடக்கிறது. எமது மக்கள் தோட்டங்களில் வேலை செய்கிறார்களோ இல்லையோ தோட்டங்களில் வாழும் மக்கள் எக்காரணம் கொண்டும் தோட்ட நிர்வாகிகளால் வெளியேற்றப்படக்கூடாது என்ற அவசரத் தடை பணிப்புரையை தோட்ட நிறுவனங்களை நோக்கி நீங்கள் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

வெறுமனே தோட்டங்களில் வேலை செய்யவில்லை என்று வெளியேற்ற இது ஒன்றும் டிபார்ட்மென்ட் பணியாளர் வீடுகள் அல்ல. கடந்த காலங்களில் இத்தகைய முயற்சிகள் நடைபெற்றபோது ஸ்தலத்துக்கு சென்று நாம் அவற்றை எதிர்த்து போராடியுள்ளோம். அப்போது பாராளுமன்றத்தில் இவை பற்றி உங்களுடன் நான் பேசியுள்ளேன். இது உங்களுக்கு தெரியும். பெருந்தோட்டங்களில் வாழும் மக்களையும் தோட்டத்தொழிற்றுறையையும் மாற்றியமைக்கும் 'சிஸ்டம் சேன்ஞ்' என்ற முறை மாற்றம் நடைமுறையாகும் வரை தோட்டங்களில் வாழும் எவரையும் வெளியேற்றக்கூடாது. நாம் அதற்கு இடம் தர மாட்டோம். அநுரகுமார அரசாங்கம், பெருந்தோட்டங்களில் நிலவும் சிஸ்டத்தை முழுமையாக மாற்றட்டும். புதிய காணி உரிமை வழங்க முன்னர் முதலில் அங்கே ஏற்கனவே வசிப்பவர்களை அடாத்தாக வெளியேற்றுவதை தடுக்கும் தடை உத்தரவை ஜனாதிபதி அநுரகுமார அறிவிக்கட்டும். தமிழ் முற்போக்கு கூட்டணி அதற்கு முழு ஒத்துழைப்புகளை வழங்கும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை விளித்து தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை சுட்டிக்காட்டி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மனோ கணேசன் எம்.பி. நேற்று அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். இது பற்றி மனோ எம்.பி. மேலும் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாவது,

எங்களது ஜனநாயக மக்கள் முன்னணியின் தொழிற்சங்க விவகார உபதலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சந்திரகுமார் இரத்தினபுரி, எஹலியகொட புசல்லாவ பிளாண்டேசன் சன்டர்லேன்ட் தோட்டத்தில் வசிக்கும் எஸ்.காந்திமதி, எம்.தவகுமார் ஆகியோருக்கு இந்த தோட்ட நிர்வாகியால் அனுப்பப்பட்டுள்ள கடித நகல்களை எனக்கு அனுப்பி இந்த விவகாரத்தை எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். இன்று பாராளுமன்ற சபை நடக்குமானால் உடனடியாக இதை சபையின் கவனத்துக்கு கொண்டு வந்திருப்பேன். தற்போது பாராளுமன்ற விடுமுறை. ஆகவே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அவசர கடிதம் எழுதியுள்ளேன். இரத்தினபுரி, எஹலியகொட புசல்லாவ பிளாண்டேசன் சன்டர்லேன்ட் நிர்வாகியால் அங்கே வசிக்கும் சம்பந்தப்பட்ட இருவருக்கு அனுப்பப்பட்டுள்ள இக்கடிதங்களின் நகல்களையும் எனது கடிதத்துடன் இணைத்துள்ளேன். இவை அனைத்தும் எனது அலுவலகப் பணியாளர் மூலம் இன்று(நேற்று) பிற்பகல் இரண்டு மணியளவில் ஜனாதிபதி செயலகத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

வெள்ளை ஆட்சியாளர்களிடம் இருந்து உள்நாட்டு கம்பனி நிர்வாகம் தோட்டங்களை பெற்றுக்கொண்டு அதே ஆண்டான் அடிமைத்துவ நோக்கில் செயற்படுகிறது. அதன் பெயர் 'மொடர்ன் ஸ்லேவரி' என்ற நவீன அடிமைத்துவம் ஆகும். இதுதான் இன்றைய பெருந்தோட்டங்களில் நிலவும் சிஸ்டம். இதை மாற்ற வேண்டும். இந்த சிஸ்டத்தை மாற்றுவது இலேசான காரியம் அல்ல. நாம் தமிழ் முற்போக்கு கூட்டணியாக இந்த சிஸ்டத்தை ஏழு பேர்ச் காணி, தனி வீடு, மேலதிக பிரதேச சபைகள் என படிப்படியாக மாற்றி வந்தோம். இனி இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுரகுமார அரசாங்கம் பெருந்தோட்டங்களில் நிலவும் சிஸ்டத்தை முழுமையாக மாற்றட்டும். புதிய காணி உரிமை வழங்க முன்னர் முதலில் அங்கே ஏற்கனவே வசிப்பவர்களை அடாத்தாக வெளியேற்றுவதை தடுக்கும் தடை உத்தரவை ஜனாதிபதி அநுரகுமார அறிவிக்கட்டும். தமிழ் முற்போக்கு கூட்டணி அதற்கு முழு ஒத்துழைப்புகளை வழங்கும் என்று குறிப்பிட்டார்.

## நத்தார்...

அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன், நல்லிணக்கத்துடன், அன்புடன் செயற்பட வேண்டும் என்றும் இலங்கை வாழ் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் மகிழ்ச்சியான இனிய நத்தார் தின வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும்,

நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தத்தை புரிந்துகொண்டு நாட்டுக்காக சகலரும் ஒன்றிணைவோம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவூட்டும் அமைதி மற்றும் அன்பின் அடையாளமாக புனித நத்தார் பண்டிகை உதயமாகியுள்ளதுடன் இறைவனின் அன்பும் மனித கௌரவமும் மனிதநேயமும் சார்ந்த சமூகத்துக்கு நம்பகமான அடித்தளத்தையும் அமைத்தது. அன்று இயேசுநாதர் போதித்த அமைதி, அன்பு, கருணை, சகவாழ்வு, இரக்கம் ஆகியவை இன்றைய எமது சமூகத்தை நாகரீகமாக்க போதுமானதாக இருந்தது.

அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மையப்படுத்திய நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின் மத விழா மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் சகல இனம், மதம், கட்சி, நிறம், இளையோர், முதியோர் என பாகுபாடின்றி கொண்டாடப்படும் கலாசார விழாவாகவும் உள்ளது. இதன் அர்த்தத்தை சரியாக புரிந்துகொண்டு நாமும் ஒரு நாடாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது.

இந்தத் தருணத்தில் எமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன், நல்லிணக்கத்துடன், அன்புடன் செயற்பட வேண்டும். இது நாட்டின் மற்றும் மக்களின் முன்னேற்றத்துக்கு காரணமாக அமையும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அப்போது அடுத்த நத்தார் தினத்தைக் கொண்டாடும் வேளையில் ஒவ்வொரு வீட்டிலும் எதிர்பார்ப்பு விளக்குகளுக்கு பதிலாக முன்னேற்றத்தின் விளக்குகள் ஒளிரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மறப்போம் மன்னிப்போம் என்பதே இயேசுவின் தத்துவம்; அதன்வழி நாமும் நடந்து மக்கள் மனங்களை வெல்வோம்

## நத்தார் வாழ்த்துச் செய்தியில் திகா எம்.பி.



''எமக்கு துன்பம் செய்பவர்களை மறப்போம் மன்னிப்போம் என்பதே உலக இரட்சகர் இயேசுநாதரின் பிறப்பு எமக்குப் போதிக்கும் தத்துவமாகும். அந்தப் போதனையின் வலையில் நாமும் நடந்து மக்களின் மனங்களை வென்றிடுவோம்''- என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது செய்தியில்,

நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் பிறந்துள்ள நேரத்தில் இயேசுநாதரின் பிறப்பை உணர்த்தும் நத்தார் பண்டிகையை வரவேற்கத் தயாராகியுள்ளோம். இந்த நன்னாளில் உறவும் நட்பும் செழிக்கவும் உழைக்கும் மக்களின் வாழ்வில் உன்னதம் தழைக்கவும் எதிர்பார்ப்புகள் நிறைவேறி எல்லோரது உள்ளங்களிலும் அமைதி நிறையவும் பிரார்த்திப்போம்.

மலையகம் உயர்ந்து மகத்தான தருணங்கள் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தவும் கிடைத்த உரிமைகளை இழந்து விடாமல் உண்மையோடும் கட்டுப்பாட்டோடும் சமமாக ஒற்றுமையைக் கட்டியெழுப்பி புதிய விடியலுக்குத் தயாராகி புத்தாண்டை வரவேற்போம்''- என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் உயிரிழப்பு

(அநுராதபுரம் நிருபர்)

மிருகங்களை வேட்டையாடும் நோக்கில் கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி பொலிஸ் பிரிவின் லேனதிவுள்வெவ பகுதியில் நேற்று முன்தினம் (23) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 49 வயதுடைய மதவாச்சி, லேனதிவுள்வெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது.

பயிர்ச்செய்கைப் பகுதிக்குச் சென்று வருவதாக வீட்டில் கூறிவிட்டு சென்ற நபர் வீட்டுக்கு வராத நிலையில், பிரதேசவாசிகளின் உதவியுடன் பொலிஸார் அப்பகுதியிலுள்ள வனப்பகுதியில் தேடுதல் நடத்தியபோது கட்டுத்துவக்கில் அகப்பட்டு உயிரிழந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலம் மதவாச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நோர்வூட் சென்ஜோன் டிலரி தோட்டத் தேயிலை மலையிலிருந்து இரண்டு சிறுத்தைக் குட்டிகள் மீட்பு



பொகவந்தலாவ நிருபர்

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நோர்வூட் சென்ஜோன் டிலரி மேல்பிரிவுத் தோட்டத் தேயிலை மலையின் அடிவாரத்திலிருந்து இரண்டு சிறுத்தைக் குட்டிகள் மீட்கப்பட்டதாக நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த தேயிலை மலையில் நேற்று (24)தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்தபோது தேயிலை மலையின் அடிவாரத்தில் இரண்டு சிறுத்தைக் குட்டிகள் இருப்பதைக் கண்டு தோட்ட நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நோர்வூட் பொலிஸார் வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இரண்டும் சிறுத்தைக் குட்டிகள் என உறுதிசெய்யப்பட்டதுடன், இந்தக் குட்டிகளை நேற்று முன்தினம் (23) இரவு தாய்ச் சிறுத்தை ஈண்டெடுத்திருக்கலாமென வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்ட இரண்டு சிறுத்தைக் குட்டிகளையும் அதே இடத்தில் வைக்குமாறு வனவிலங்கு அதிகாரிகள் குறித்த தேயிலை மலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அறிவித்ததாகத் தொழிலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இரண்டு குட்டிகளும் காணப்பட்ட பகுதியில் சிறுத்தைப் புலியொன்று அலைந்து திரிவதாகவும் அந்தப் பகுதிக்குச் சென்று தொழில்புரிய முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு 389 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு 389 சிறைக் கைதிகள் அரச பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விடுவிக்கப்படவுள்ளவர்களில் நால்வர் பெண் கைதிகள் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பத்து மில்லியன் ரூபா பெறுமதியான குஷ் ரக போதைப்பொருளுடன் ரஷ்ய பிரஜை கைது



பத்து மில்லியன் ரூபா பெறுமதியான குஷ் ரக போதைப்பொருளுடன் ரஷ்ய பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

34 வயதுடைய குறித்த சந்தேகநபர் தன்னை தகவல் தொழில்நுட்ப வல்லுநராகக் காட்டிக்கொண்ட நிலையில், விமான நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொண்ட சோதனையின்போது அவரது பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு கிலோ 50 கிராம் குஷ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் பல்வேறு நாடுகளில் குஷ் பயிரிடுதல், பதப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் நேற்று (24)பிற்பகல் 12.50 மணியளவில் பேங்கொக்கிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL-403 இல் விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கைதுசெய்யப்பட்ட ரஷ்ய பிரஜை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# தாயாரைக் காண ஜனாதிபதி அநுரகுமார ஹெலிகொப்டரில் சென்றதாகப் பரவிய செய்தி

## போலியானதென உறுதிப்படுத்தப்பட்டது

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் தனது தாயாரைப் பார்வையிட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உலங்கு வானூர்தியில் (helicopter) சென்றதாகவும் ஜனாதிபதியின் தாயார் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பு லங்கா வைத்தியசாலைக்கு உலங்கு வானூர்தி மூலம் கொண்டுசெல்லப்பட்டதாகவும் சில பதிவுகள் சமூகவலைத்தளங்களில் பகிரப்படுவதால் FactSeeker இது குறித்து ஆராய்ந்தது.

இவ்வாறான பதிவுகள் சமூகவலைத்தளங்களில் பகிரப்படுவதற்கு மூலமாக உள்ள காணொளி ஒன்றையும் FactSeeker இனால் அவதானிக்க முடிந்தது. கொழும்பு லங்கா வைத்தியசாலையின் மேல் பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று கீழே இறங்குவது போன்ற காணொளியே இவ்வாறான பதிவுகள் பகிரப்படுவதற்கு மூலமாக அமைந்துள்ளது என்பதை அறிய முடிந்தது.

அக்காணொளியை ஆராய்ந்ததில், இது கடந்த டிசம்பர் 16ஆம் திகதியன்று கொழும்பு லங்கா வைத்தியசாலையில் விமானப்படையின் தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவுக்கு வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்வின்போது எடுக்கப்பட்ட காணொளி என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

மேலும், இது குறித்து கொழும்பு லங்கா வைத்தியசாலையின் அதிகாரிகளிடம் வினவியபோது, ஜனாதிபதியின் தாயார் எமது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவில்லையென்றும் ஜனாதிபதி கொழும்பு லங்கா வைத்தியசாலைக்கு வருகைதரவில்லையென்றும் தெரிவித்தனர்.

ஆகவே, அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெறும் தனது தாயாரைப் பார்வையிட ஜனாதிபதி உலங்கு வானூர்தியில் சென்றதாகவும் ஜனாதிபதியின் தாயார் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் இருந்து கொழும்பு லங்கா வைத்தியசாலைக்கு உலங்கு வானூர்தி மூலம் கொண்டுசெல்லப்பட்டதாகவும் சமூகவலைத்தளங்களில் பகிரப்படுகின்ற பதிவுகள் உண்மைக்குப் புறம்பானவை என்பதை FactSeeker உறுதிப்படுத்துகிறது.

சாமியே சரணம் ஐயப்பா

அகில இலங்கை
சபரி தீர்த்த யாத்திரைக் குழு வழங்கும்
மகர ஜோதி மண்டல பூஜை



கொழும்பு - செட்டியார் தெரு புதிய கதிரேசன் ஆலயத்தின் அகில இலங்கை சபரி தீர்த்த யாத்திரைக் குழு வழங்கும் மகர ஜோதி மண்டல பூஜைகள் நாளை 26 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன.
மகா மண்டல பூஜை காலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி சபரி ஐயப்பனுக்கு அபிஷேக அலங்காரம் ஆனந்த மிகு பஜனை இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அன்றைய தினம் மாலை 6 மணியளவில் கன்னி சாமிகளுக்கான பூஜை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சிறப்பு தீபாராதனை, பக்த அடியார்களுக்கு விபூதிப் பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்படும்.

இந்நிகழ்வுகள் அனைத்துக்கும் இலங்கையின் முதல் தர பத்திரிகையான 'தமிழன்' ஊடக அனுசரணை வழங்குகிறது.

Amritha
மனம் மகிழட்டும் நறுமணத்தால்

தமிழன் உடன்
திருப்பதி புனித யாத்திரை



Amritha வின் திருப்பதி புனித யாத்திரைக்கான அதிர்ஷ்டசாலிகளாக நீங்களும் மாறலாம். இதற்காக நீங்கள் செய்ய வேண்டியது 'தமிழன்' பத்திரிகையில் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பிரசுரமாகும் Amirtha திருப்பதி புனித யாத்திரை தொடர்பாக கூப்பனை வெட்டியெடுத்து அதில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை பூர்த்தி செய்து Amirtha ஊதுபத்தி பெட்டியை அதனுடன் இணைத்து

Amritha வின் திருப்பதி புனித யாத்திரை,
'தமிழன்' ஆசிரியர் பீடம், இல: 91,
லிபர்ட்டி பப்ளிஷேர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு -07

என்ற முகவரிக்கு எதிர்வரும் 2025-02-28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

கூப்பன் இலக்கம் 18

பெயர்: ----------------------------------------

முகவரி : ----------------------------------------

தொலைபேசி இலக்கம்: ----------------------------------------

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2024 டிசம்பர் 25ஆம் திகதி, புதன்கிழமை

# பொறுப்பாக இயங்குமா பொதுப் போக்குவரத்து?

பயணிகளின் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் தேவையற்ற பொருட்களை பொருத்த அனுமதிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

பஸ் உட்பட வாகனங்களில் நிறுவப்பட்ட சாதனங்களை அகற்றுமாறு போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளிடம், பிரதான மோட்டார் வாகன ஆய்வாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் ஹட்டனில் இருந்து கண்டி நோக்கி பயணித்தபோது விபத்துக்குள்ளான தனியார் பஸ்ஸை, நுவரெலியா மாவட்ட பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் தமிந்த சேனாநாயக்க நேற்றுமுன்தினம் பார்வையிட்ட பின்னர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஹட்டன் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு உத்தியோகத்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பொலிஸ் பாதுகாப்பில் உள்ள விபத்துக்குள்ளான பஸ்ஸை பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் பார்வையிட்டார்.

இந்தச் சோதனையில் ஓடும் பஸ்ஸின் கதவு பூட்டு நிரந்தரமானதாக இல்லை எனவும் அது தற்காலிகமாக பொருத்தப்பட்டிருந்தது எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. கதவைத் தற்காலிகமாக மூடும் முறை கடைப்பிடிக்கப்பட்டமையும் இதன்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஓட்டுனர் ஆசனபட்டி (பெல்ட்) அணியவில்லை எனவும் பஸ்ஸில் விபத்தை ஏற்படுத்தக்கூடிய பல வெள்ளை இரும்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்ததால் 03 பேர் உயிரிழந்ததாகவும் ஏராளமானோர் பலத்த காயமடைந்ததாகவும் மோட்டார் வாகன பரிசோதகர் தெரிவித்தார். மேலும், பஸ்ஸின் இருக்கைகள் தரமான முறையில் அமைக்கப்படாததால், அனைத்து இருக்கைகளும் கழன்று விழுந்து ஒன்றுடன் ஒன்று மோதி பலத்த காயமடைந்ததாக பரிசோதகர் தெரிவித்தார்.

இதற்கிடையில், தகுதியற்ற பஸ்ஸை இயக்கியமை தொடர்பில் பஸ்ஸின் உரிமையாளருக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் பஸ் விபத்துச் சம்பவமானது 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல் உள்ளதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். வீதிகளில் ஓடும் பெரும்பாலான போக்குவரத்து பஸ்கள், இதர மக்கள் பயன்பாட்டு வாகனங்கள் தரமற்றவையாக ஒதுக்கி வைக்கப்படவேண்டிய நிலைமையைக் கொண்டவையாக இருக்கின்றன. அண்மையில் தியத்தலாவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சம்பந்தப்பட்ட பஸ் வண்டி ஓட முடியாத நிலையில் இருந்த ஒன்றென்பது அந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்ற பின்னரே பகிரங்கமானது.

இந்தப் பின்னணியில், நாடளாவிய ரீதியில் பயணிகள் போக்குவரத்து பஸ்கள் உள்ளிட்ட ஏனைய வாகனங்களை சோதனையிடும் விசேட போக்குவரத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பயணிகள் போக்குவரத்து பஸ்கள் உள்ளிட்ட ஏனைய வாகனங்களால் இடம்பெற்ற விபத்துகளை கருத்திற்கொண்டு தொடர்ந்து இடம்பெறும் இவ்வாறான விபத்துகளை குறைப்பதற்காக பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய இந்த போக்குவரத்து சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, பண்டிகைக்காலம் முடியும் வரை, நாடளாவிய ரீதியில் நாடு முழுவதும் இந்த போக்குவரத்து சோதனை நடவடிக்கை அமுல்படுத்தப்படவுள்ளது. இதன்போது பிரதானமாக பொதுப் பயணிகள் போக்குவரத்து பஸ்கள் சோதனை செய்யப்படுவதுடன் அந்த பஸ்களின் சாரதிகள் குடிபோதையில் அல்லது போதைப்பொருளை பயன்படுத்தி செலுத்துகின்றனரா? என்பது தொடர்பிலும் சோதனையிடப்படவுள்ளது.

மேலும், பஸ்ஸை கவனக்குறைவாகவும் அபாயகரமாகவும் செலுத்துதல், அதிவேகத்தில் வாகனம் செலுத்துதல், போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் செலுத்துதல், பொருத்தமற்ற டயர் அல்லது பிற குறைபாடுகள் உள்ளதா என சோதனை செய்து, அந்த சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேசமயம், மற்ற வாகனங்களிலும் சோதனை நடத்தப்படவுள்ளதுடன், அதற்காக, 24 மணி நேரமும் நாடு முழுவதும் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த விசேட நடவடிக்கையின்போது, கவனக்குறைவாக அல்லது போக்குவரத்து விதிகளை மீறி இயங்கும் பஸ்கள் மற்றும் பிற வாகனங்கள் தொடர்பாக 119 மற்றும் 1997 ஆகிய குறுகிய தொலைபேசி இலக்கங்களுக்கு பொதுமக்கள் தகவல் வழங்க முடியும்.பொலிஸார் இந்த செயற்பாட்டை வெறுமனே பண்டிகைக் காலத்துக்கு மட்டும் வரையறுக்காமல் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிவரை இந்த நடவடிக்கையை தொடர்தல் வேண்டும். அதேபோல பொறுப்பற்றவகையில் போக்குவரத்தில் ஈடுபடும் அல்லது பொதுப் போக்குவரத்து வாகனங்களை வைத்திருப்போர் தொடர்பிலும் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். யாரோ ஒருவரின் பொறுப்பற்ற செயலால் அப்பாவிகள் இறப்பது ஏற்கத்தகா.




**01. பல்துறைசார் நன்கொடை உதவிகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

சமூக – பொருளாதார அபிவிருத்தி மற்றும் இருதரப்பு ஒத்துழைப்புகளைப் பலப்படுத்துவதற்காக இந்திய அரசு மற்றும் இலங்கை அரசுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தச் சட்டகமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தச் சட்டகத்துக்கமைய, இந்திய அரசால் வழங்கப்படுகின்ற 2,371.83 மில்லியன் இலங்கை ரூபா நன்கொடை உதவிகளின் கீழ் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்கீழ், கல்வி, சுகாதாரம், விவசாயம், கடற்றொழில், சுற்றுலாத்துறை மற்றும் சமூக வலுவூட்டல் போன்ற துறைகளில் விசேட கவனம் செலுத்தப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய 33 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்த சட்டகத்தில் இருதரப்புக்கிடையில் கையொப்பமிடுவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. ஐக்கிய நாடுகள் சபையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (UNITAR) மற்றும் வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலா அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

ஒவ்வொரு தரப்பினரும் செயற்பாடுகளை வகுத்து நடைமுறைப்படுத்தக் கூடிய ஒத்துழைப்பு வேலைச் சட்டகத்தைத் தயாரிப்பதற்கும் தற்போது காணப்படுகின்ற வளங்களைப் பயன்படுத்தி பரஸ்பர ரீதியாகப் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்கும் இயலுமை கிட்டும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (UNITAR) மற்றும் வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலா அமைச்சுக்கும் இடையில் 03 ஆண்டுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் குறிப்பாக பேண்தகு அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்குரிய பயிற்சி மற்றும் கற்றல் ஒத்துழைப்புகள், இராஜதந்திரிகளுக்கான பயிற்சிகள், அனர்த்த இடர்களைக் குறைத்தல் மற்றும் நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பூகோளத் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு தொடர்பான பயிற்றுவித்தல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, இருதரப்பினர்களுக்கிடையே முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03.உள்நாட்டு தேச எல்லைகளைக் கடந்து அமைந்துள்ள பிரதேசங்களில் உயிர்ப்பல்வகைமை தொடர்பான ஒப்பந்தம்**

உள்நாட்டு தேச எல்லைகளைக் கடந்து அமைந்துள்ள பிரதேசங்களில் சமுத்திர உயிர்ப்பல்வகைமை தொடர்பான சர்வதேச அரசுகளுக்கான மாநாட்டில் உள்நாட்டு தேச எல்லைகளைக் கடந்து அமைந்துள்ள பிரதேசங்களில் உயிர்ப்பல்வகைமை தொடர்பான ஒப்பந்தம் 2023.06.19 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தமானது சமுத்திரச் சட்டங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயம் (UNCLOS) இன் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மூன்றாவது உடன்படிக்கையாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் மனித நடவடிக்கைகளின் விளைவுகளாக சமுத்திர உயிர்ப்பல்வகைமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன், சமுத்திரத் தரப்பண்பு மற்றும் தாங்குதிறன் குறைவடைந்து செல்கின்ற இடர் ஏற்பட்டுள்ளது. சமுத்திரச் சட்டங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தை மிகவும் சிறப்பாக நடைமுறைப்படுத்தல், பலதரப்பட்ட தரப்பினர்களின் விரிவான ஒத்துழைப்புகள் மற்றும் ஒருங்கிணைப்புகள் மூலம் பரந்து காணப்படும் நிலப்பிரதேசங்களைப் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, உள்நாட்டு தேச எல்லைகளைக் கடந்து அமைந்துள்ள பிரதேசங்களில் உயிர்ப்பல்வகைமை தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலா அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. சீரற்ற காலநிலையால் நாட்டின் விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் நட்டஈடுகளைச் செலுத்தல்**

கடந்த தினங்களில் நிலவிய சீரற்ற காலநிலையால் பல்வேறு மாவட்டங்களில் வீடுகள், நெடுஞ்சாலைகள், வயல்கள் மற்றும் பயிர்நிலங்கள் வெள்ளநீரால் மூழ்கியமையும் குளக்கட்டுகள், கால்வாய் நீரிணைகள் அதிகமாக உடைந்தமையாலும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. கமநல சேவைகள் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய 2024.12.02 தினத்தன்று நாடளாவிய ரீதியில் ஏறத்தாழ 91,300 ஏக்கர் வயல்கள் முழுமையாக அழிவடைந்துள்ளதுடன், 86,225 ஏக்கர் வயல்கள் பகுதியளவில் அழிவடைந்துள்ளது. மேலும், 173 சிறுநீர்ப்பாசனங்கள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், 1,148 பகுதியளவிலும் சேதமடைந்துள்ளது. அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் 750 ஏக்கர் மரக்கறிச் செய்கைகள் அழிவடைந்துள்ளமை பதிவாகியுள்ளது. மேலும், அழிவடைந்து போயுள்ள வயல்களில் மீண்டும் 02 மாதம் அல்லது 03 மாதகால இனங்கள் அல்லது பொருத்தமான குறுகியகால பயிர்களைப் பயிரிடுவதற்குத் தேவையான விதை நெல் மற்றும் விதையினங்களை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. தற்போது காணப்படுகின்ற விவசாயக் காப்புறுதி முறையின் கீழ், உயர்ந்தபட்சம் 02 ஹெக்டேயர் (05 ஏக்கர்) வரையான செய்கைகளுக்கு உயர்ந்தபட்சம் 40,000 ரூபா நட்டஈடாகவும் அத்துடன், சோளம், உருளைக்கிழங்கு, மிளகாய், பெரிய வெங்காயம் மற்றும் போஞ்சி போன்ற 05 வகையின செய்கைகளுக்கு உயர்ந்தபட்சம் 01 ஹெக்டேயர் (2.5 ஏக்கர்கள்) வரைக்கும் ஒரு ஏக்கருக்கு உயர்ந்தபட்சம் 40,000 ரூபா நட்டஈடாகவும் 2025 ஆம் ஆண்டுக்கான விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து வழங்குவதற்கும் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டு விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. அரிசி இறக்குமதி / பெறுகைக்கான அனுமதி**

உள்நாட்டு சந்தையில் நிலவுகின்ற அரிசித் தட்டுப்பாடு காரணமாக 2024.12.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பலநோக்கு) கூட்டுத்தாபனம் 70,000 மெற்றிக்தொன் பெறுகை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன், இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரமின்றி அரிசி

இறக்குமதி செய்வதற்காக 2024.12.20 தொடக்கம் தனியார் துறை இறக்குமதியாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டு சந்தையில் நிலவுகின்ற அரிசித் தட்டுப்பாடு 2025 ஜனவரி மாத இறுதி வரைக்கும் நிலவுமென அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரமின்றி தனியார் துறை இறக்குமதியாளர்களுக்கும் அரிசி இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள காலப்பகுதியை 2025.01.10 ஆம் திகதி வரை நீடிப்பதற்காக வர்த்த, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. உள்ளூராட்சி அதிகாரசபை நிறுவனங்களில் திண்மக் கழிவு**

**முகாமைத்துவத்தை ஒழுங்குமுறைப்படுத்தி சுழற்சிப் பொருளாதாரத்தை உருவாக்குவதில் குறித்த நிறுவனங்களின் பொறுப்புக்களை நிறைவேற்றல்**

2024.12.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் "Clean Sri lanka" வேலைத்திட்டத்திற்கமைய, நிலைபெறுதகு நகர திண்மக்கழிவு முகாமைத்துவத்துக்கு சமூகப் பங்கேற்பு மற்றும் சமூகத் தெளிவூட்டலின் முக்கியத்துவத்தை அடையாளங் கண்டு கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்காக அனைத்துப் பிரஜைகளுக்கும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை உறுதிப்படுத்தும் நோக்கில், வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுத் திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, உள்ளூராட்சி அதிகாரசபைகளில் அதிகார எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு உத்தேச வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**7. உள்ளூராட்சி மன்றங்களின் வருவாய் ஈட்டல் கருத்திட்டங்களுக்கு செயலாற்றுகை அடிப்படையிலான மூலதன வழங்கல் கருத்திட்டம்**

உள்ளூராட்சி மன்றங்களின் சுய வருமானம் ஈட்டல் வழிகளைப் பலப்படுத்தி திறைசேரியின் செலவுச் சுமையைக் குறைப்பதற்கு ஒழுங்குமுறையான வேலைத்திட்டங்களை அடையாளங் காண்பதற்காக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் செயலாற்றுகையை அளவிட்டுப் பார்க்கின்ற வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதன்கீழ், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவம், சேவை வழங்கல், ஆட்சிமுறை மற்றும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒத்துழைப்பு போன்ற துறைகளை உள்ளடக்கி 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயலாற்றுகையை அளவிட்டுப்பார்க்கின்ற வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. குறிப்பாக, பிரதேச சபைகளால் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளின் அளவுசார் மற்றும் பண்புசார் தரங்களை பிரதேச வேறுபாடுகளுக்கமைய பல வித்தியாசங்கள் காணப்படுகின்றமையை குறித்த செயலாற்றுகை மதிப்பீட்டின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. அம்மதிப்பீட்டின் போது அடையாளங் காணப்பட்ட பலங்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பாக இடைக்கால நிலைபேறான வேலைத்திட்டமாக 2025 – 2027 ஆண்டுக்கான தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைகளில் வருமானம் ஈட்டல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக மூலதன வழங்கல் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காகவும்,அதன்கீழ் 2025 ஆம் ஆண்டில் ஒரு மாகாணத்திலிருந்து 06 பிரதேச சபைகள் வீதம் 54 பிரதேச சபைகளை அடையாளங்கண்டு, குறித்த கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான மூலதனத்தை வழங்குவதற்காகவும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 2025.04.01 தொடக்கம் 2025.08.31 வரையான காலப்பகுதியில் மெர்பன் வகை 06 மசகு எண்ணெய்க் கப்பல் தொகையைக் கொள்வனவு செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தம்**

தொடக்கம் 2025.08.31 வரையான காலப்பகுதியில் மெர்பன் வகை 06 மசகு எண்ணெய்க் கப்பல் தொகையைக் கொள்வனவு செய்வதற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகத்தர்களிடம் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கு 05 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரையின் பிரகாரம் M/s Aditya Birla Global Trading (Singapore) Pte. Ltd இற்கு வழங்குவதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்**

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கீழ்வரும் ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2384/31 இலக்க 2024.05.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்

2395/32 இலக்க 2024.07.31 ஆம் திகதிய அதிவிசேடவர்த்தமானி அறிவித்தல் மூலம்

வெளியிடப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 05 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்

2404/19 இலக்க 2024.10.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்

2406/02 இலக்க 2024.10.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்

2408/15 இலக்க 2024.11.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்

2412/38 இலக்க 2024.11.30 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்

**10. 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தை இரத்துச் செய்தல்**

1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம் இதுவரைக்கும் 08 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டத்தை இரத்துச் செய்து புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், இதுவரை குறித்த பணி பூர்த்தி செய்யப்படவில்லை. எமது நாட்டின் உள்நாட்டு நீர்ப்பரப்புகள் மற்றும் ஆழ்கடலில் சட்டவிரோதமாக, பதிவு செய்யப்படாததும் ஒழுங்குமுறைப்படுத்தாததுமான மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு சட்டவாக்கத்தை பலப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன் கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளும், சட்ட வரைஞர் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுடன் கூடிய குழுவால் அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆரம்ப சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11.இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன்களை விடுவிக்கும் பணிகளை வினைத்திறனாக்குதல்**

கொழும்புத் துறைமுகத்தின் தனியார் துறையினருக்குச் சொந்தமான 02 கொள்கலன் முனையங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான 02 கொள்கலன் முனையங்களுடன் மொத்தமாக 04 கொள்கலன் முனையங்கள் இயங்கி வருவதுடன், மீள் ஏற்றுமதிக்கான தடைநீக்க ஒப்புதல் வழங்கல் உள்ளிட்ட, ஒரு கொள்கலன் முனையத்தின் ஊடாக ஒரு நாளுக்கு 5000 – 10,000 கொள்கலன்கள் பரிசீலிக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றது. சுங்க அதிகாரிகள் வெளியேறும் வாயிலில் பரிசீலிப்பதற்குத் தேவையான கொள்கலன்களைத் தீர்மானித்து, குறித்த கொள்கலன்களைப் பௌதீக ரீதியாக ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். கடந்த காலங்களில் தடைநீக்க ஒப்புதல் வழங்கல் செயன்முறையில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளமையால், சுங்க அதிகாரிகள் அன்றாடம் அதிகளவான கொள்கலன்களைப்

பரிசீலித்துள்ளதுடன், துறைமுகத்துக்கு உள்வருகின்ற கப்பல்களின் எண்ணிக்கையில் சற்று அதிகரிப்பும் காணப்படுகின்றது. கொள்கலன்களை விடுவிப்பதற்காக தற்போது கடைப்பிடிக்கின்ற முறைமையின் வினைத்திறனை மேலும் அதிகரித்து எந்தவொரு தாமதமுமின்றி துறைமுகத்திலிருந்து கொள்கலன்களை விடுவிப்பதற்குப் பொருத்தமான ஒழுங்குமுறையை அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு அதிகாரியொருவரை நியமித்தல்**

ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் பதவியில் கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான எஸ்.ஆலோகபண்டார பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டமையால், குறித்த பதவி வெற்றிடமாகவுள்ளது. ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விரிவான கடமைப்பட்டியல்களைக் கருத்தில் கொண்டு, குறித்த பதவிக்கு நிரந்தர நியமனமாக அதிகாரியொருவரை நியமிக்க வேண்டியுள்ளது. அதற்கமைய, தற்போது தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான என்.யூ.என்.மென்டிஸ் அப்பதவிக்கு நியமிப்பதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுகின்ற ஏ. ஜகத் டீ. டயஸின் சேவைக்காலம் 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதுடன், 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் குறித்த பதவிக்குப் பொருத்தமான அதிகாரியொருவரை நியமிக்க வேண்டியுள்ளது. தற்போது திருகோணமலை நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபராக கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான சாமிந்த ஹெட்டியாரச்சியை நியமிப்பது பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் அவரை ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிப்பதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இன்றைய நாளில்...

1741 – ஆன்டர்சு செல்சியஸ் தனது செல்சியஸ் வெப்பமானியைக் கண்டுபிடித்தார்.

1831 – ஜமேக்காவில் அடிமைகள் விடுதலை வேண்டி கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

1947 – சீனக் குடியரசின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1968 – கீழ்வெண்மணிப் படுகொலைகள்: கூலி அதிகம் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட 44 தலித் மக்கள் தமிழ் நாட்டில் கீழ்வெண்மணி கிராமத்தில் உயிருடன் தீயிட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

1991 – சோவியத் தலைவர் பதவியில் இருந்து மிக்கைல் கொர்பச்சோவ் விலகினார். அடுத்த நாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.

2005 – பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் அதிகாலை 12.15 மணியளவில் மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் நத்தார் ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது துணை இராணுவக் குழுவைச் சேர்ந்த ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



# மருத்துவ சேவையை பகுதியளவில் குறைத்தமையால் மூடப்படும் நிலைக்கு வந்துள்ள வேலணை வைத்தியசாலை!

பு.கஜிந்தன்

வேலணை வங்களாவடி பிரதேச வைத்தியசாலை ஆளணிப் பற்றாக்குறை காரணமாக மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தீவகப் பிரதேசத்தின் இரண்டாவது பிரதான வைத்தியசாலையாகவும் தீவகத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளதுமான குறித்த வைத்தியசாலை, கடந்த நல்லாட்சிக் காலத்தில் சுகாதார அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்னவினால் 'பி' தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டது.

ஆனாலும், குறித்த தரத்துக்கேற்ப ஆளணி வளங்களை நிவர்த்திக்கும் எந்தவிதமான பொறிமுறையையும் குறித்த அமைச்சர் ஏற்படுத்தவில்லை. அதன் பின்னரும் அமைக்கப்பட்ட அரசாங்கங்களில் இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் உரிய தரப்பினரது கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டபோதும் அது கண்டுகொள்ளப்படாத நிலையில் இருந்துவந்தது.

ஆனாலும், இருந்த குறைந்தளவான ஆளணி வளங்களைக்கொண்டு குறித்த வைத்தியசாலையின் தரத்துக்கேற்ப 24 மணி நேரமும் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.


குறிப்பாக, இரு வைத்தியர்களே இவ்வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இரவு பகலாக ஓய்வின்றி, தமக்கான விடுப்புகளின்றி சேவை செய்யும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தனர்.


இதேபோன்று தாதியர் பற்றாக்குறையும் இவ் வைத்தியசாலையில் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது. இதுவும் துறைசார் அதிகாரிகளின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டுசெல்லப்பட்டபோதும் அவ்விடயமும் அலட்சியப் போக்காகப் பார்க்கப்பட்டு கைவிடப்பட்டது.

எனினும், குறித்த வைத்தியசாலையில் மாதாந்தம் 2,500க்கும் அதிகமான நோயாளர்களும் வருடாந்தம் 30 ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்களும் சிகிச்சை பெற்று வந்ததற்கான ஆதாரங்களும் வைத்தியசாலையில் ஒட்டப்பட்டுள்ள பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதேநேரம், பிரசவ விடுதி உள்ளிட்ட பல சிகிச்சைத் தொகுதிகளைக் கொண்டுள்ள இந்த வைத்தியசாலை நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு மற்றும் மண்டைதீவு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய தீவகத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளமையானது நோயாளர்களின் அவசர தேவைகளை நிவர்த்தி செய்யும் ஒரு நிலையமாகவும் இருந்து வருகின்றது.

அத்துடன், குறித்த வைத்தியசாலைக்கு அவசர நோயாளர் காவி வாகனங்களும் (அம்பியூலன்ஸ்) பற்றாக்குறை அல்லது இல்லாத நிலையே காணப்படுவதாகத் தெரியவருகிறது.



வேலணைப் பிரதேச வைத்தியசாலையில் மருத்துவ சேவையைப் பெறுகின்ற பொதுமக்களிற்கான அறிவித்தல்

எமது வைத்தியசாலையில் இதுவரை காலமும் தங்களுக்கான சேவையை வழங்குவதற்கு போதிய அளவிலான வைத்திய ஆளணி இல்லாத பட்சத்திலும் குறைந்த பட்சம் நான்கு வைத்தியர்கள் தேவைப்படும் இடத்தில் இரு வைத்தியர்கள் இரவு பகலாக தடையின்றிய சேவையினை வழங்கி வந்திருந்தனர். இதனால் அவர்களின் வேலைப்பளு பெரிதும் அதிகரித்திருந்தது. அத்துடன் அதிகரித்த வேலைப்பளு காரணமாக சேவையில் ஏற்படுகின்ற நன்மை தீமைகளுக்கும் தாமே பொறுப்புக்கூற வேண்டிய கடமை இருந்தும், இலவச மருத்துவ சேவையையும், இவ் வைத்தியசாலையையும் பெரிதும் நம்பியுள்ள மக்களுக்கு இடையறாது சேவையை வழங்க வேண்டும் என்னும் நல்லெண்ணத்தில் எதனையுமே கருத்தில் எடுக்காது பொது மக்களுக்கான சேவையை அயராது தொடர்ந்திருந்தனர்.

ஒரு மாதத்தில் 720 மணித்தியால கடமை நேரத்தில், மாதத்திற்கு 300 மணித்தியாலங்கள் வரை வேதனம் எதையும் பெற்றுக்கொள்ளாமலேயே இதுவரை தமது கடமைகளைத் திறம்பட ஆற்றி வந்தனர்.

இருப்பினும் அண்மையில் வைத்தியசாலைக்கு வருகை தந்த மாகாண மட்டக்கணக்காய்வுக் குழு வைத்தியர்களை நிர்வாகக் கட்டமைப்பிற்கு உட்பட்டதான சேவையை மாத்திரம் வழங்குமாறு கேட்டுக்கொண்டதால், இனி வரும் காலங்களில் இரு வைத்தியர்களாலும் வழங்கப்படக்கூடிய சேவைகளையே வழங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனால்

வரும் தை மாதம் முதலாம் திகதியிலிருந்து காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையிலான சேவைகளை மாத்திரமே வைத்தியர்களினால் வழங்கமுடியும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்து கொள்கின்றோம்.

நன்றி

வைத்தியர்கள்.

இந் நிலையில், வரும் ஜனவரி மாதம் முதல் குறித்த வைத் தியசாலையின் மருத்துவ சேவையை மாலை 6 மணியுடன் நிறுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அறிவுறுத்தலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த செய்தியானது தற்போது புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் புதிய மாற்றங்கள் வரும் என நம்பி வாக்களித்த மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், இந்தச் சேவைக் குறைப்பை இடைநிறுத்தி வைத்தியசாலைக்கான ஆளணி வளங்களை நிவர்த்திசெய்து தொடர்ந்தும் வேலணை மக்களுக்கு குறிப்பாக, தீவக மக்களுக்கு 24 மணி நேர சேவையை குறித்த வைத்தியசாலையூடாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் துறைசார் தரப்பினரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜா-எல, வெலிகம்பிட்டியவில் மூன்று வீடுகள் மீது துப்பாக்கிச்சூடு

ஜா-எல, வெலிகம்பிட்டிய மற்றும் ஆனா மாவத்தையில் உள்ள மூன்று வீடுகள் மீது நேற்று (24) காலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தின்போது எவருக்கும் காயங்கள் ஏற்பட வில்லை என தெரியவந்துள்ளது.

மூன்று வீடுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. துப்பாக்கிதாரிகள், "பதுவத்தே சாமர" என்ற சந்தேகத்துக்குரிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி யின் உறவினர் ஒருவரின் வீட்டை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதுடன், சம்பவத் தின்போது வீட்டில் எவரும் இருக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மற்றொரு வீட்டில் வசிப்பவர்கள் துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில் சுற்றுலா சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாக சந்தேகிக்கப்படும் வீட்டின் மீது கடந்த 15 நாட்களுக்கு முன்னரும் இதேபோன்று துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மது போதையில் வாகனம் ஓட்டுபவர்களை கண்டறிய ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கருவிகள்

### அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் விநியோகம்

மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களைக் கண்டறிவதற்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கருவிகள் நாடு முழுவதுமுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் விநியோகிக்கப் பட்டுள்ளன. பயணிகள் போக்குவரத்து பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்களைப் பரிசோதிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் (23) முதல் நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமீப நாட்களாக அதிகரித்து வரும் வாகன விபத்துகளைக் குறைப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நாடு முழுவதும் 24 மணி நேரமும் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விசேட நடவடிக்கையின்போது, பொதுமக்கள் கவனக்குறைவாக, அல்லது சட்டத்தை மீறும் வகையில் பஸ்கள் மற்றும் பிற வாகனங்களை ஓட்டினால் 119 மற்றும் 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு அறிவிக்க முடியுமென பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை ஊழியர்களுக்கு எலிக்காய்ச்சல் தடுப்பூசி



வட மாகாணத்தின் சில மாவட்டங்களில் எலிக்காய்ச்சல் நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில், அதனைத் தடுக்கும் நோக்கில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை ஊழியர்களுக்கு எலிக்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றப்பட்டது.


இதன்போது பிரதேச சபை ஊழியர்களுக்கு எலிக்காய்ச்சல் நோய்க்கான விழிப்புணர்வுச் செயலமர்வும் இடம்பெற்றது. இந்த விழிப்புணர்வுச் செயலமர்வை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி நடத்திவைத்ததுடன், பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்திருந்தார்.

## வீதிகளை ஆக்கிரமித்த கட்டாக்காலி மாடுகள்; செட்டிகுளம் பிரதேச சபை எடுத்த நடவடிக்கை

வவுனியா, வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் நகரின் அழகு சீர்குலைவதுடன், போக்குவரத்துக்கும் பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்டு வந்த நிலையில் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன.

கட்டாக்காலி மாடுகளினால் ஏற்படும் போக்குவரத்து இடைஞ்சலையும் விபத்துகளையும் குறைக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையினால் மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை வளாகத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.



மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி 1000 ரூபா, தண்டம் 1000 ரூபா, தண்டப்பணம் ஏற்றியிறக்கல் (மாடு ஒன்றுக்கு – அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்பு கொடுக்கப்பட்டால்) 500 ரூபா, ஒரு நாள் பராமரிப்புச் செலவு 250 ரூபா ஆகியவற்றைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியுமெனவும் பராமரிப்புச் செலவு நாளாந்தம் 250 ரூபா விதிக்கப்படுமென பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

## வல்வெட்டித்துறையில் எம்.ஜி.ஆரின் 37ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு

பு.கஜிந்தன்

வல்வெட்டித்துறையில் தமிழக முன்னாள் முதல்வரும் புரட்சித் தலைவருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 37ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று (24) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.வல்வெட்டித்துறை ஆலடியில் உள்ள எம்.ஜி.ஆர் நினைவுத் தூபியில் உள்ள எம்.ஜி.ஆரின் திருவுருவச் சிலைக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இந்நினைவஞ்சலிக்கு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த வல்வெட்டித்துறை எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் தலைவர் தில்லையம்பலம் ஜெயராஜ் (ராசு) தலைமையில் சக உறுப்பினர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு யாழ். நகர வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பரிசோதனை





பு.கஜிந்தன்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நேற்று (24) யாழ்ப்பாண பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுகாதார சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

உணவகங்கள் மற்றும் இதர வர்த்தக நிலையங்கள் உள்ளடங்கலாக 28 வர்த்தக நிலையங்களில் இந்தப் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் 11 கடைகளில் குறைபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. அந்த வர்த்தக நிலையங்களில் வியாபாரத்துக்காக வைக்கப்பட்டிருந்த 9 வகையான உணவுப்பொருட்கள் அழிக்கப்பட்டன.

அத்துடன், நான்கு கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பின் பேரில், சுகாதார வைத்திய அதிகாரி, தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி, தாய் - சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து இந்தக் களப் பரிசோதனையை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### நாணய மாற்று விதம் (24.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 180.1462 | 189.7469 |
| கனேடியன் டொலர் | 201.7833 | 210.6634 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.2198 | 41.8115 |
| யூரோ | 302.0383 | 314.7878 |
| ஜப்பான் யென் | 1.8509 | 1.9269 |
| சிங்கப்பூர் டொலர் | 213.3253 | 223.3742 |
| ஸ்ரேலிங் பவுன் | 364.6039 | 378.8994 |
| சுவிஸ் பிராங் | 322.2157 | 337.7963 |
| ஐ.அ. டொலர் | 292.2525 | 300.9844 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 783.4903 |
| குவைட் | குவைட் தினார் | 959.1217 |
| ஓமான் | ஓமான் றியால் | 767.7806 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.0893 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.6869 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.4821 |

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மார்கழி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** காதல் விவகாரங்களில் சிற்சில முட்டுக்கட்டைகள் வந்து பின் தீரும். வியாபாரத்தில் அக்கரையுடன் செயற்படுங்கள்.

**ரிஷபம்** உங்கள் நீண்ட நாள் கனவு இன்று பலிக்கப்போகின்றது. எதிரிகள் மண்டியிட்டு சரணாகதி அடைவார்கள்.

**மிதுனம்** குழந்தைகளால் செலவுகளோ அல்லது மனச்சங்கடங்களோ ஏற்படலாம். யாரையும் நம்பி இரகசியங்களை உளறிவிடாதீர்கள்.

**கடகம்** உறவுகள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் புரிந்துகொள்வீர்கள். வாகனப் பயணங்களின்போது கவனம் வேண்டும்.

**சிம்மம்** பழையவற்றை அப்புறப்படுத்தி புதியவற்றை உங்களுக்காக வாங்கி மகிழ்ச்சியடைவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**கன்னி** குடும்பத்தில் எதிர்பாராத சில குழப்பங்களால் உங்கள் அமைதி கெடலாம். தன ரீதியில் ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

**துலாம்** உடல், மன நலத்தைக் கெடுக்கும் செயல்களில் ஈடுபடாதீர்கள். கணவன் மனைவி உறவில் சில விரிசல்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** தேவையற்ற பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். பொறுமையோடு அமைதியைக் கையாளுங்கள்.

**தனுசு** பெண்களால் தன இலாபங்கள், உதவிகள் உண்டு. தொழில், வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள்.

**மகரம்** உங்கள் தொழில் வியாபார பொறுப்புகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள். இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** தந்தையின் உடல் நிலை மற்றும் சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். நண்பர்களால் சிரமங்களை அனுபவிப்பீர்கள்.

**மீனம்** கோபத்தை அடக்கிக் கொள்வதால் பெரிய பெரிய பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். மனக் கட்டுப்பாடு அவசியம்.

| | |
|---|---|
| **திதி** | : தசமி மு.இ.10.29 வரை பின் ஏகாதசி |
| **நட்சத்திரம்** | : சித்திரை பி.ப.3.22 வரை பின் சுவாதி |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | :மரணயோகம் முழுவதும் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்** | : காலை 6.19–7.49 மணி வரை காலை 9.19– 10.19 மணி வரை பகல் 1.49 – 3.19 மணி வரை மாலை 4.19 – 5.19 மணி வரை |
| **ராகு காலம்** | : 12.19–1.49 மணி வரை |
| **எமகண்டம்** | : 7.49 – 9.19 மணி வரை |
| **குளிகை** | : 10.19 –12.19 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : மீன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

### அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்

**இன்று பிற்பகல் 3.22 மணி வரை**

பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 3.22 மணிக்கு மேல்**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு கொழும்பில் கூடியது

## புதிய நியமனங்களும் வழங்கிவைப்பு







ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு நேற்று (24) கொழும்பில் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தலைமையில் கூடியது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் தேர்தல்களுக்கு முகங்கொடுத்திருந்தது.

இக்கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு பரணிதரன், தவிசாளர் ஜெயபாலன், நிதிச் செயலாளர் கணேசன், இணை உப தலைவர் சசிகுமார், நிர்வாக செயலாளர் பிரியாணி உட்பட கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, களுத்துறை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்ட அமைப்பாளர்கள், பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

நடைபெற்ற தேர்தல்கள், நாடு முழுவதும் கட்சியின் வியூகங்கள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பல சவால்களுக்கு மத்தியிலும் கட்சி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்கள் கணிசமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டமை தொடர்பாகவும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடவுள்ள திட்டங்கள் பற்றியும் தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பில் பல சாத்தியங்கள் ஆராயப்பட்டன.

தனித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏணி சின்னத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியாக மின்சூழ் (டோர்ச்லைற்) சின்னத்தில் அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசிச் சின்னத்தில் களமிறங்குவது என்ற பல சாத்திய, சாதக பாதகங்கள் ஆராயப்பட்டன.

கட்சியின் சர்வதேச தொடர்பாடல்கள் விவகார உப தலைவராக பாரத் அருள்சாமி, கட்சியின் பிரசார செயலாளராக ஏ.ஆர்.வி.லோஷன், உதவிச் செயலாளராக பாலசுரேஷ் குமார் ஆகியோர் தலைவர் மனோ கணேசனால் பிரேரிக்கப்பட்டு அரசியல் குழுவினால் ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அரசியல் குழுக் கூட்டத்தையடுத்து எதிர்வரும் வாரங்களில் அனைத்து மாவட்ட அரசியல் குழுக் கூட்டங்களும் நடைபெறும்.

# தனியார் வகுப்புகளை நடத்தத் தடை விதித்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இடைநிறுத்தம்

மேல் மாகாணத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு பிரத்தியேக வகுப்புகளை மட்டுப்படுத்தி மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேல் மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய சுற்றறிக்கையை அமுல்படுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் தமது பாடசாலை மாணவர் களுக்கான பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்கு தடைவிதித்து கடந்த வெள்ளிக்கிழமை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

சுற்றறிக்கைக்கு ஆட்சேபனைகள் எழுந்ததையடுத்து அதனை நடைமுறைப் படுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# ஈரான் தூதரகத்தின் கலாசார மையம் ஏற்பாடு செய்த யால்டா நைட் இசை நிகழ்ச்சி







ஈரான் இஸ்லாமிய குடியரசுத் தூதரகத்தின் ஈரான் கலாசார மையம் ஒழுங்குசெய்த யால்டா நைட் (Yalda Night) ஒரு பண்டைய பாரசீக கொண்டாட்டம். இந்நிகழ்வு லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் டாக்டர் அலிரேசா டெல்கோஷ் (Dr. Alireza Delkhosh) தலைமையில் நடைபெற்றது.

பாரசீக மரபுகள் மற்றும் வசீகரிக்கும் இசை நிகழ்ச்சி ஈரானிய இசைக் கலைஞர்கள் செய்த் இஷாக் சதேகி மற்றும் அவரின் பாரியார் ஷஹர்சாத் நெஜாதி ஆகியோரால் இசையமைக்கப்பட்டது. மேலும் அவர்கள் வயலின் மற்றும் றபான் ஆகிய இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர்.

இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், இராஜதந்திரிகள், தூதரக அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

# சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச செயற்கைக் கால்கள்





சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகள் 10 பேருக்கு இலவச செயற்கைக் கால்கள் வழங்கும் நிகழ்வு களுத்துறை, போம்புவலை வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள ‘ஆவாஸ் சகோதரத்துவ பாத சுவடுகள்’ அமைப்பின் ஆதரவில் நடைபெற்றது.

இதன்போது நீரிழிவு, விபத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கால்களை இழந்து பொருளாதார ரீதியாக பின்னடைவுக்குள்ளான விசேட தேவையுடைய 10 பேருக்கு சுமார் 28 இலட்சம் ரூபா பெறுமதியான செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டன.

சகோதரத்துவ பாத சுவடுகள் அமைப்பின் மூலம் நன்கொடையாளர்களின் நிதியுதவியுடன் பயனாளர்களுக்கு இலவசமாக செயற்கைக் கால்கள் வழங்கும் நிகழ்வு ஒவ்வொரு வருட இறுதியிலும் இடம்பெறும். இந்த நிகழ்வில் இதுவரையில் மொத்தம் 3,000 பேருக்கு மேல் இலவச செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வின் இறுதியில் கருத்து தெரிவித்த ஆவாஸ் செயற்கைக் கால்கள் நிறுவகத்தின் தலைவர் அருண சமரவிக்கிரம, ஐம்பதுக்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்ற ஆவாஸ் நிறுவகம் சர்வதேச மட்டத்தில் தரமான செயற்கைக் கால்களை இலங்கையில் தயாரித்து வழங்கக்கூடிய வசதிகளைக் கொண்டுள்ளதுடன், எதிர்வரும் காலப் பகுதியில் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் நலன் கருதி நன்கொடையாளர்களின் உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் தமது சகோதரத்துவ பாதச் சுவடுகள் அமைப்பின் சேவையை விரிவுபடுத்த உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்தார்.

# சத்திரசிகிச்சையின் பின்னர் உயிரிழந்த 9 வயது சிறுமி

## மருத்துவர்களின் அலட்சியமே காரணமென பெற்றோர் முறைப்பாடு

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் ஒன்பது வயது சிறுமியொருவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹல்தோட்டையைச் சேர்ந்த தரம் 4 இல் கல்வி கற்கும் தனுஜா விக்ரமாரச்சி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுநீர்க்குழாய் தொடர்பான சத்திர சிகிச்சைக்காக டிசம்பர் 17 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

டிசம்பர் 18ஆம் திகதி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால், சத்திரசிகிச்சை முடிந்து சிறுமி சுயநினைவு பெறத் தவறிவிட்டதாகப் பெற்றோர் கூறுகின்றனர். ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட போதிலும், தனுஜாவின் உடல்நிலை மோசமடைந்த நிலையில், அவர் டிசம்பர் 22ஆம் திகதி உயிரிழந்தார்.

மருத்துவர்களின் அலட்சியமே சிறுமியின் உயிரிழப்புக்கு காரணமென பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளனர். இதனையடுத்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# அறநெறி பாடசாலைகளுக்கிடையிலான கிராமிய ஆடற்கலை போட்டி நிகழ்வு





அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இரத்தினபுரி மாவட்ட அறநெறி பாடசாலைகளுக்கிடையிலான கிராமிய ஆடற்கலை போட்டி நிகழ்வுகள் (22) ஞாயிற்றுக்கிழமை அன்று இரத்தினபுரி, கல்லெல்ல கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி போட்டி நிகழ்வில் ஹப்புகஸ்தன்னை, LRG சுவாமி விவேகானந்தர் அறநெறி பாடசாலை, பம்பரலாகந்த ஐங்கரன் அறநெறி பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி தமது ஆடற் திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதில் விசேட அம்சமாக ஹப்புகஸ்தன்னை LWK வேதமொழி அறநெறி பாடசாலையும் கல்லெல்ல ஸ்ரீ சாரதாம்பாள் அறநெறி பாடசாலையும் வெற்றிபெற்று கொழும்பில் இடம்பெறவுள்ள இறுதிச்சுற்றில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன், பம்பரலாகந்த ஐங்கரன் அறநெறி பாடசாலை மாணவர்கள் போட்டியின் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.









*லங்கா சமசமாஜக் கட்சியின் 89ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பிலுள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் விசேட மாநாடொன்று கடந்த வெள்ளிக்கிழமை (20) இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கட்சித் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, கொழும்பிலுள்ள சீனத் தூதரகப் பிரதிநிதி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.*




*துந்துவை அல் - மவ்னதுர் ரஹ்மான் பாலர் பாடசாலையின் 2024ஆம் ஆண்டுக்கான கலை விழாவும் 18ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்வும் துந்துவை முஸ்லிம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன. (பேருவளை பீ.ம்.முக்தார்)*

# சுவிசேஷ தரிசன மிஷனரி ஊழியங்கள் திருச்சபையின் நத்தார் கொண்டாட்டம்







உலகுக்கு அமைதியையும் சமாதானத்தையும் எடுத்துரைக்கும் இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினமான நத்தார் பண்டிகையை உலகெங்கிலும் வாழும் கிறிஸ்தவர்கள் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் கொழும்பு 09, சுவிசேஷ தரிசன மிஷனரி ஊழியங்கள் திருச்சபையின் நத்தார் கொண்டாட்டம் நேற்று முன்தினம் (23) இரவு தலைமைப் போதகர் - அப்போஸ்தகர் விஷ்வா தலைமையில் கொழும்பு என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது, ஆரம்ப பிரார்த்தனையுடன் சபையின் இளையோர் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆடல், பாடல், சமூக நாடகம் என பல்சுவை அம்சங்கள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து நத்தார் தாத்தாவின் வருகையும் திருச்சபை சிறுவர்கள் மற்றும் இளையோர் குழுவினருக்கான நத்தார் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ‘சுவிசேஷ தரிசன மிஷனரி ஊழியங்கள்’ திருச்சபையின் தலைமைப் போதகர் - அப்போஸ்தகர் விஷ்வாவுடன் போதகர் இராதாகிருஷ்ணன் நாயுடு, போதகர் ஜரீனா மற்றும் போதகர் மைக்கேல் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்வைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ‘சுவிசேஷ தரிசன மிஷனரி ஊழியங்கள்’ திருச்சபையின் தலைமைப் போதகர் - அப்போஸ்தகர் விஷ்வா,

‘‘இலங்கை முழுவதும் இயேசு கிறிஸ்துவின் வெளிச்சமாகிய அருட் பார்வை கடந்து செல்ல வேண்டும். ஏனெனில், பிரச்சினை என்னும் இருளில் வாழும் மக்களுக்கு இயேசுவின் வெளிச்சம் ஊடாக வாழ்வு வளம் பெற்று மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ பிரார்த்திப்பதோடு, இலங்கையின் பழைய ஆட்சியாளர்களிடமிருந்து புதிய ஆட்சியாளராக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அதனூடாக நிறைய மாற்றங்களை நாங்கள் பார்க்கிறோம். ஆகவே, அவருக்கு ஒத்தாசையாகவும் இந்தத் தேசம் அனைத்து மக்களுடைய ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாக மாறவும் நாங்கள் இந்தத் தினத்திலே கர்த்தராகிய ஆண்டவரிடம் வேண்டுகிறோம்’’ - என்றார்.

# விழிப்புணர்வு செயலமர்வு





(மூதூர் செய்தியாளர்)

காணி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விழிப்புணர்வு செயலமர்வு அகம் மனிதாபிமான வள நிலையம் மற்றும் PCCJ அமைப்புகளின் ஏற்பாட்டில் மூதூர் பிரதேச சபை மண்டபத்தில் திங்கட்கிழமை (23) இடம்பெற்றது.

சம்பூர், 64ஆம் கட்டை ஆகிய பகுதிகளில் காணி ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு உரித்தான காணிகளை மீளப்பெறுவதற்காகவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காணி ஆக்கிரமிப்பைத் தவிர்த்துக் கொள்வதற்குமான சட்ட முன்னெடுப்புகள் தொடர்பான தெளிவை ஏற்படுத்தும் பயிற்சி செயலமர்வும் சட்ட ஆவணங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தலும் வளவாளர் சந்திரகுமாரால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆவணங்களைப் பரிசீலனைசெய்து பொருத்தமான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காகன தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டதோடு, இல்லாத ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், அவர்களின் உரிமைகளைக் கோருவதற்காகவும் அவர்களின் எல்லைகள் மற்றும் வரலாற்று ரீதியான அடையாளங்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் பாதிக்கப்பட்டவர்களின் பங்குபற்றுதலுடன் குறித்த செயலமர்வு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த செயலமர்வில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர், உதவிக் கணக்காளர், கள இணைப்பாளர் மற்றும் கிராம தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் நேற்று கல்முனை முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார். இதன்போது அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டதுடன், விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. அத்துடன், நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்கள் அவருடன் முஸாபஹா செய்து வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இதில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமா லெப்பை உட்பட பிரமுகர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். (திகாமடுல்ல செய்தியாளர்)

# ஜெப மையத்தில் ஒளிவிழா





(மட்டக்களப்பு)

பாதுகாப்பு அமைச்சால் 27 ஆண்டுகளுக்குப் பின் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் புளியந்தீவு லைட் ஹவுஸ் ஜெப மையத்தின் தேவாலயமானது மக்களின் பாவனைக்காக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டதன் பின்பு இடம்பெற்ற முதலாவது இயேசு பாலகனின் பிறப்பை வரவேற்கும் ஒளிவிழா நிகழ்வு ஆலயத்தின் பிரதான போதகர் விஜயன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜெஸ்டினா முரளிதரன் கலந்துகொண்டு கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

இன நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக இடம்பெற்ற இந்த ஒளி விழா நிகழ்வில் சகோதர மொழியிலும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றமை விசேட அம்சமாகும். 50க்கும் மேற்பட்ட வறிய பெற்றோரை இழந்த விசேட தேவையுடைய மாணவர் களுக்கான கற்றல் உபகரணங்களும் அன்பளிப்புகளும் அதிதிகளால் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

ஆலயத்தின் பங்குத்தந்தை விஜயன் போதகரால் ஆசிச் செய்தியும் வழங்கப்பட்டது. இயேசு பாலகனின் பிறப்பைக் குறிக்கும் சிறார்களின் அழகிய நடன நிகழ்வுகள், அதிதிகளின் உரை, கரோல் கீதங்கள், இயேசு பாலகனின் பிறப்பை நினைவூட்டும் நத்தார் பண்டிகையை வரவேற்கும் நடனங்கள், நத்தார் தாத்தாவின் நடனம் மற்றும் சிறார்களுக்கான பரிசுப் பொருட்கள் வழங்கலும் இங்கு இடம்பெற்றன.

சிறப்பு அதிதிகளாக முன்னாள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி கிரேஸ் நவரத்தினம், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி பி.சொர்ணராஜா மற்றும் வைத்தியர் அஞ்சலா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாளிகைக்காட்டில் இரத்ததான முகாம்





(மாளிகைக்காடு செய்தியாளர்)

மாளிகைக்காடு மனிதாபிமான உதவியாளர்களின் ஏற்பாட்டில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக இரத்ததான முகாம் ஞாயிற்றுக்கிழமை (22) மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குருதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக முதலா வது தடவையாக நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில் அதிகளவான பெண்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் செயலாளரும் அல்-மீஸான் பௌண்டேஷன் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் ஏ.எல். இம்தியாஸ், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்தியர் குழாம், தாதிகள், உத்தியோகத்தர்கள், மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், மாளிகைக்காடு மனிதாபிமான உதவியாளர்கள் அமைப்பின் நிர்வாகிகள், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர், செயலாளர் எனப் பலரும் கொண்டனர்.

# நீதிபதி அப்துல் மனாப் பணி ஓய்வு

(றாசிக் நபாயிஸ்)



மருதமுனை கிராமத்தைச் சேர்ந்த ரி.எல்.அப்துல் மனாப் எனும் நீதியின் சிகரம், பிறருக்கு உதவுவதில் சிறிதேனும் தயக்கம் காட்டாத சமூகசேவையாளராவார். பணிவு மற்றும் நேர்மை போன்ற நற்பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக அவரது வாழ்நாள் முழுவதும் நீதிச் சேவையில் கொள்கை தவறாத அர்ப்பணிப்புடன், மத மற்றும் மொழி பார்க்காது சேவை புரிந்து மக்கள் மனதை வென்ற மகத்தான மனிதர்.

படிக்கின்ற காலம் முதல் தனது திறமைகளை சிறப்பாக முன்னிலைப் படுத்தி ஏனையவர் களுக்கும் முன்மாதிரியாக கீழ்ப்படிவான மாணவராக இருந்து மேல் நீதிமன்ற நீதிபதியாக அவரது பயணம், அவரது மதிப்புகள் மற்றும் அவர் சேவை செய்த சமூகத்தின் மீதான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்குச் சான்றாகும்.

மருதமுனை ஷம்சுல் இல்ம் வித்தியாலயத்தில் 1969 ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டு வரை (தரம் 05) தனது ஆரம்பக் கல்வியைப் பயின்று பின்னர் 1974ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரியில் தரம் 06 முதல் 08 வரை கற்று 1977ஆம் ஆண்டு முதல் 1978ஆண்டு வரையான காலப்பகுதியில் 09 மற்றும் 10ஆம் வகுப்புகளை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் பயின்று மீண்டும் ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்தில் 1979 முதல் 1981 வரை வர்த்தகப் பிரிவில் தனது உயர்தரப் கல்வியைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார்.

இவரே இப்பாடசாலையிலிருந்து சட்டத்துறைக்கு தெரிவான முதல் மாணவர் என்ற வரலாற்றுப் பெருமைக்குரியவர். 1983/84 கல்வியாண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் சேர்ந்த அவர் பல சவால்களை எதிர்கொண்டு விடாமுயற்சியுடன் 1990ஆம் ஆண்டு தனது பட்டப்படிப்பை முடித்து 1991ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞராகப் பதவியேற்று கொழும்பில் ஒரு தசாப்த கால வழக்கறிஞராகப் பணியாற்றி பலரது நன்மதிப்புகளைப் பெற்றார்.

மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற இவர் நீதித்துறையில் சேவையாற்றும்போதே கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது சட்டமுதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். தனது அர்ப்பணிப்பான விடாமுயற்சியால் 2000ஆம் ஆண்டில், அவர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நீதவானாக நியமிக்கப்பட்டார். இவர் தனது முதல் நியமனத்தை நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக மூதூரில் ஆரம்பித்து தொடர்ந்து அக்கரைப்பற்று மற்றும் திருகோணமலையில் பணியாற்றினார். இவருடைய சிறப்பான சேவையை கண்டு மகிழ்ந்த திருகோணமலை மக்கள் அதற்கான அங்கீகாரமாக குச்சவெளிக் கிராமத்தில் ஒரு வீதிக்கு இவரது பெயரைப் சூட்டியமை அதற்குச் சான்று பகர்வதோடு, அது இன்றுவரை நிலைத்திருப்பதும் ஒரு வரலாறு.

இவ்வாறு தனது தொடர் படிப்பால் உயர்வு கண்ட இவர், சட்டத்துறையில் தரமுயர்வு பெற்று மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு கிட்டியதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மற்றும் வவுனியா நீதிமன்றங்களில் நீதித்துறையில் சேவையை திறன்பட முன்னெடுத்தார். மீண்டும் 2017ஆம் ஆண்டு, மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்று மன்னார் மாவட்டத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றார். இது அவரது வாழ்க்கையில் ஒரு உயர்ந்த அடைவாக அமைந்தது. அதே ஆண்டில் தனது பாரியாருடன் புனித ஹஜ் கடமையையும் நிறைவு செய்த நீதிபதி பின்னர் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக 07 ஆண்டுகள் இறுதிப்பணி புரிந்தார்.

மேலும், 25 ஆண்டுகள் நீதிபதியாகவும் 10 ஆண்டுகள் சட்டத்தரணியாகவும் 35 ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றிய நீதிபதி தன்னை நாடும் எவருக்கும் தன்னால் முடியுமான உதவிகளை செய்யக்கூடியவராக அறியப்பட்டார். சமூக சேவை செயற்பாடுகளில் அதீத ஆர்வங்கொண்ட நீதிபதி தனது அதிகாரத்தையோ பதவியையோ என்றுமே துஷ்பிரயோகம் செய்யாதவர். இவர் முழு சமூகத்தின் மரியாதையையும் பாராட்டையும் பெற்று நீதிக்கான அவரது பணிவான பணியும் அர்ப்பணிப்பும் அவர் சேவை செய்தவர்களின் வாழ்க்கையில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளது.

தாவூத் லெப்பை (மரைக்கார்) -கதீஜா வீவி தம்பதியின் புதல்வரான இவர் 2024 டிசம்பர் 23ஆம் திங்கட்கிழமை தனது 62ஆவது வயதில் ஓய்வுபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# மக்களின் முக்கிய பிரச்சினைகள் திருகோணமலையில் நேற்று ஆராய்வு

## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விசேட கவனம்





*(கிண்ணியா செய்தியாளர்)*

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமான அருண் ஹேமசந்திரா தலைமையில் நேற்று (24) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி வரவேற்புரையை தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பமானது. திருகோணமலை மாவட்டத்தில் காணிப்பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள், பல்வேறு காரணங்களால் நிலுவையில் உள்ள திட்டங்களை மீண்டும் செயற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிலம் குறித்து பின்தொடர்தல் தொடர்பான விடயங்கள், மாவட்டத்திலுள்ள பாதைகள் மற்றும் பாலம் தொடர்பான திட்டங்கள், மின்சார சபை எதிர்நோக்கும் பிரச்சினைகள், காட்டு யானை அச்சுறுத்தல் மற்றும் பிற விவசாயப் பிரச்சினைகள், மீன்பிடித்தொழில், அனர்த்த முகாமை தொடர்பான விடயங்கள், மாவட்டத்தில் தற்போதுள்ள கல்விச் சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குதல், மாவட்ட நீர்ப்பாசனத் திட்டம் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், அக்மீமன கமகே ரொஷான் பிரியசஞ்சன, கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச உயரதிகாரிகள் மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





***திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா நேற்று (24)மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து தனது கடமைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பின்னர், மாவட்டத்துக்கான, முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.*** ***(சீனக்குடா செய்தியாளர்)***

# மாகாண சபைத் தேர்தலை சித்திரை மாதத்துக்குள் நடத்துவதற்கு ஏற்பாடு

## சாணக்கியன் எம்.பியிடம் ஜனாதிபதி உறுதி

*(பழுகாமம் செய்தியாளர்)*


எதிர்வரும் சித்திரை மாதத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சட்டச் சீர்திருத்தமொன்றைக் கொண்டுவந்த பின்னர் உடனடியாக மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் சனிக்கிழமை (21) மட்டக்களப்பு நகரிலுள்ள அமரர் தந்தை செல்வா பூங்காவில் இடம்பெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முதலாவதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவோம்.

மாகாண சபைத் தேர்தல் நடத்துவதற்கான சட்டதிருத்தம் வந்தால் மாகாண சபைத் தேர்தலையும் உடனடியாக நடத்தக்கூறியும் ஒரு கோஷம் வரும். சித்திரை முடிந்ததன் பின்னர் அந்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து அதனூடாக மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடிய வகையில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் பின்னர் நிச்சயமாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மகளிர், இளைஞர் அணியினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# சம்மாந்துறை பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம்

*(நாவிதன்வெளி செய்தியாளர்)*



சம்மாந்துறை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (24) நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எம்.மஞ்சுல ரத்னாயக்க, எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.ஏ.எம்.தாஹீர், கே.கோடீஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம, மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம்.சாஹீர், பிரதம கணக்காளர் ஏ.எல்.மஹ்ரூப், உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம்.அஸ்லம், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலகத்தின் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இவ் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பிரச்சினைகள், சம்மாந்துறை வைத்தியசாலை காணி விவகாரம், ஜமாலியா பாடசாலை மாற்றுக் காணி விடயம், மாவடிப்பள்ளியில் உடனடியாக பாலம் அமைப்பது சம்பந்தமான தீர்மானம், விவசாய காணி சம்பந்தமான பிரச்சினைகள், நீர்ப்பாசனப் பிரச்சினைகளுக்கான முறைப்பாடுகளும் தீர்வுகளும் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகளும் எட்டப்பட்டன.

# வைத்தியசாலைக்குள் சுத்தியலுடன் அத்துமீறிய இருவர் கைது

*(பாறுக் ஷிஹான்)*

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை வைத்தியப் பணிப்பாளரின் உரிய அனுமதியின்றி வைத்தியசாலைக்குள் சுத்தியலுடன் அத்துமீறி உட்பிரவேசித்த இருவரை கல்முனை தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை (23) இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த வைத்தியசாலையில் இருவர் அனுமதியின்றி உட்பிரவேசித்ததாக அங்கு பாதுகாப்புப் பணிக்குப் பொறுப்பான அதிகாரியினால் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை மாலை முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாட்டுக்கமைய குறித்த இருவரையும் கைது செய்த கல்முனை தலைமையகப் பொலிஸார் தடுத்துவைத்து விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் கைதானவர்கள் கல்முனை மாநகரிலுள்ள பிரபல ஆடையகம் ஒன்றின் பணியாளர்கள் என்பதுடன் குறித்த வைத்தியசாலைப் பணிப்பாளரின் முன் அனுமதியின்றி சுத்தியலுடன் வைத்தியசாலைக்குள் பிரவேசித்து குறித்த வைத்தியசாலையில் சந்தேகத்துக்கிடமாக நடமாடி முரண்பாடான கருத்துகளை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் தெரிவித்துள்ளதாக விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. எனினும், கைதானவர்கள் வழமைபோன்று தாங்கள் புதிய ஆண்டுக்கான கலண்டர்களை அரச - தனியார் திணைக்களங்களில் தொங்கவிடுவதற்கு சென்றதாகவும் அதன்போது இவ்வாறான நிலைமை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் குறித்த வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் உள்ளக விசாரணையொன்றை மேற்கொண்டுள்ளதுடன் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திகவின் வழிகாட்டலில் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடி நகரசபைக்குட்பட்ட சேதமடைந்த வீதிகளை விரைவாக புனரமைப்பு செய்க

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை

காத்தான்குடி நகரசபைக்குட்பட்ட அனர்த்தத்தினால் சேதமடைந்து காணப்படும் அனைத்து வீதிகளையும் விரைவாகப் புனரமைப்புச் செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் கே.சிவகுமாரிடம் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பான கூட்டம் காத்தான்குடி நகர சபை பிரதான மண்டபத்தில் திங்கட்கிழமை (23) இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் கே.சிவகுமார், திட்டத்துக்குப் பொறுப்பான வீதி



அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் எம். திலகரத்னே, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏனைய அதிகாரிகள், காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயசிறீதர், காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.எஸ்.எம். அஸ்பர் உள்ளிட்ட அதிகாரிகள், ஊர்ப் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

முதற்கட்டமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள வீதிகளை பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

## - பாடசாலை உபகரணக் கொள்வனவு -

# தெரிவுசெய்யப்பட்டோருக்கு மட்டும் கொடுப்பனவு வழங்குவது நியாயமல்ல

## புத்திஜீவிகள் சுட்டிக்காட்டு

*(துறைநீலாவணை செய்தியாளர்)*

பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு வழங்குவது நியாயமானதல்ல. அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுக்க வேண்டுமென கிழக்கு புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அஸ்வெசும பயனாளிகளின் பிள்ளைகளுக்கும் அஸ்வெசும கொடுப்பனவு தேவையுடையோரின் பிள்ளைகளுக்கும் 6,000 ரூபா உதவித்தொகை வழங்குவதை விட, அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் அரசாங்கம் சலுகைகளை வழங்கவேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.மாணவர் தொகைக்கேற்ப வரி குறைக்கப்பட்டு சலுகைகள் வழங்கப்பட வேண்டும். குறிப்பிட்டதொரு குழுவுக்கு மாத்திரம் 6,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவது பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும். இந்தச் சலுகைகள் அனைத்து மாணவர்களுக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும். காரணம், அரசாங்க உத்தியோகத்தர் எனும் தரப்படுத்தலில் பலர் இன்று வரைக்கும் கடனாளிகளாகவே இருக்கின்றனர்.

இலவசக் கல்வி அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படுவதைப் போன்று அரசாங்கத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சகல வசதி வாய்ப்புகளும் அனைத்து மாணவர்களுக்கும் சென்றடைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# படுவான்கரைப் பகுதி வயல் நிலங்களின் சேத விபரங்கள் பற்றிய கள ஆய்வு

*(வாழைச்சேனை செய்தியாளர்)*

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட மழையுடன் கூடிய வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களைக் கணிப்பிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட படுவான்கரைப் பகுதி வயல் நிலங்களின் சேத விபரங்கள் பற்றிய கள ஆய்வு நேற்று இடம்பெற்றது.

வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பழுகாமம் கமநல சேவைப் பிரிவு பெரிதும் பாதிக்கப்பட்ட இனிப்பட்டி வெளி விவசாயக் கண்டம் கொழும்பிலிருந்து சென்றிருந்த கமத்தொழில் கமநலக் காப்புறுதி உத்தியோகத்தர் குழுவினால் பார்வையிடப்பட்டு சேத விபரங்கள் ஆய்வு செய்து கணக்கிடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பழுகாமம் கமநல சேவைப் பிரிவில் 2,506 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் இனிப்பட்டிவெளி விவசாயக் கண்டத்தில் சுமார் 1000 ஏக்கர் நெற் செய்கை பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கள விஜயத்தின்போது மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களம் ,கமநல சேவை நிலைய உயரதிகாரிகள் மற்றும் விவசாய அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# திருமலை ஊடகவியலாளர்களுக்கு இலவச போக்குவரத்து அட்டை வழங்குக

## கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை



*(சீனக்குடா செய்தியாளர்)*

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் திருகோணமலை மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு முன்னர் வழங்கப்பட்டதைப் போன்று புதிய ஆண்டிலும் (2025), இலவச பயணிகள் போக்குவரத்து அட்டையைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தால் விடுக்கப்பட்டுள்ளது. இவற்றோடு, இன்னும் சில கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஊடகவியலாளர் ஒன்றியம் கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர் பீ.ஆர்.பி.கித்சிறி நவரத்னவிடம் திங்கட்கிழமை (23) கையளித்தது. அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது,

மாவட்டத்துக்குள் பயணிப்பதற்காக வழங்கப்பட்ட இலவச பயணிகள் போக்குவரத்து அட்டைகளை மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்துச் செய்யும் வகையிலும் ஒழுங்குபடுத்தித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும். அரச ஊழியர்களாக இல்லாத பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் இலவச பயண அனுமதிச்சீட்டை ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

சில பஸ் நடத்துநர்கள், இலவச போக்குவரத்து அனுமதி அட்டையை ஏற்க மறுப்பதனால், பஸ்களில் வைத்து ஊடகவியலாளர்கள் பல்வேறு அசௌரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால், இலவச பாஸ் தொடர்பாக நடத்துநர்களுக்கு போதியளவு தெளிவூட்டப்பட வேண்டும்.

இலவசப் பயண அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்படும் கடிதங்களில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அடையாள அட்டை இல்லாத ஊடகவியலாளர்கள் தாங்கள் பணிபுரியும் ஊடக நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைக் கடிதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த மகஜர் கையளிக்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை முகாமையாளர் எம்.எம்.எச்.உதயகுமாரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அவசரகால நிலைமைகளை எதிர்நோக்குவது தொடர்பான பயிற்சி





*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

டயகோணியா மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயல் முன்னணி அனுசரணையில் U CAN திட்டத்தினூடாக சமூக அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில் விழுமியக் கல்வியூடாக, புத்தாக்க சமூகத் தீர்வுகளை வழங்கும் தொனிப்பொருளில் அவசரகால நிலைகளுக்கு எதிர்நோக்கு தொடர்பான பயிற்சி நிகழ்வு சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களிடத்தில் மீட்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதில் இளைஞர்கள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் நற்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலீக் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்ற பயிற்சி நிகழ்வில், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறு அனுபவமிக்கவரும் காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாட்டாளரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி அஸ்லம் சஜா வளவாளராகக் கலந்து கொண்டார்.

கடந்தகால அனர்த்த நிலைமைகளின்போது சாய்ந்தமருது, கல்முனை மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களில் நன்கு பணியாற்றிய, தெரிவு செய்யப்பட்ட சில அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் பங்குபற்றலுடன் இது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

எதிர்கால அனர்த்தங்களின்போது சிவில் சமூக அமைப்புகளின் வகிபாகம் மற்றும் செயற்பாடுகள் குறித்து விளக்கங்கள் அளிக்கப் பட்டதுடன், இந்தப் பிராந்தியத்தில் அனர்த்தங்கள் ஏற்படுமிடத்து உரிய அரச நிறுவனங்களுடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் எவ்வாறு இணைந்து பணியாற்றுவது தொடர்பாகவும் குழுச் செயற்பாடுகள் மூலம் இதன்போது விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## 15 ஆவது தேசிய ஆயுள் காப்புறுதி ஆலோசகர் மாநாடு விருது விழாவில் யூனியன் அஷ்யூரன்ஸின் சாதனைகள் பதிவு



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குனரான யூனியன் அஷ்யூரன்ஸ் அண்மையில் நடைபெற்ற 15ஆவது தேசிய ஆயுள் காப்புறுதி மாநாடு விருதுகள் வழங்கும் நிகழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகளைப் பதிவு செய்திருந்தது. இந்நிகழ்வு Monarch Imperial இல் அண்மையில் நடைபெற்றபோது இலங்கை காப்புறுதி சம்மேளனத்தின் (IASL) சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை முகவர்கள் பங்கேற்றிருந்தனர்.

'காப்புறுதியினூடாக ஆயுள்களுக்கு வலுவூட்டல்'எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில் ஆயுள் காப்புறுதித் துறையைச் சேர்ந்த 680க்கும் அதிகமான சிறந்த நிபுணர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்தச் சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் மீண்டெழுந்திறன் மற்றும் சிறப்பாக செயலாற்றல் போன்றவற்றில் கவனம் செலுத்தியிருந்ததுடன், ஆயுள் காப்புறுதித் துறையைச் சேர்ந்த நிபுணர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழவும் வலுவூட்டும் வகையிலும் அறிவுப்பகிர்வு அமர்வாக இது அமைந்துள்ளது.

ஆயுள் காப்புறுதித் துறையில் யூனியன் அஷ்யூரன்ஸ் வெற்றிகரமாக இயங்கியிருந்ததைத் தொடர்ந்து சிறப்பாக செயலாற்றியிருந்தவர்களின் பங்களிப்புகளைக் கௌரவிக்கும் வகையில் இந்தப் பெருமைக்குரிய ஆயுள் காப்புறுதித் துறை விற்பனை விருதுகள் 2023 நிகழ்வு அமைந்திருந்தது. குறிப்பாக, யூனியன் அஷ்யூரன்ஸ் தலைமைத்துவ அணியின் சிறப்பான செயற்பாடுகளுக்கான தெளிவான எடுத்துக்காட்டாக தேசிய மற்றும் பிரிவு விருதுகளில் பெருமளவு விருதுகளைத் தனதாக்கியிருந்தது.

## சிறுவர்கள் ஊட்டச்சத்தைப் பெற்றுக்கொள்ள உதவுவதற்காக கைகோர்த்துள்ள Uber Eats - SOS Children's Villages



இலங்கையில் உணவு மற்றும் மலிகைப் பொருட்களை விநியோகிப்பதில் முன்னணித் தளமாகத் திகழும் Uber Eats, நாடெங்கிலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக சிறுவர் பராமரிப்பில் உலகில் பிரசித்திபெற்ற அரச சார்பற்ற நிறுவனமான SOS Children's Villages Sri Lanka உடன் கைகோர்த்துள்ளது. பெற்றோரின் ஆதரவின்றிய சிறுவர்களுக்கு அன்றாட உணவுகள் மற்றும் அத்தியாவசிய பராமரிப்பை வழங்குவதற்காக ரூபா ஒரு மில்லியன் தொகையை Uber Eats நன்கொடையாக அளித்துள்ளது. இதை விட, இலங்கை மக்களும் Uber Eats app மூலமாக உணவுகளை நன்கொடையாக வழங்கி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இக்கூட்டாண்மை அவர்களுக்கு வலுவூட்டுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பராமரிப்பை வழங்கி அவர்கள் உடல்,உள வலிமைமிக்க பிரஜைகளாக மாறுவதற்குத் தேவையான உறவுமுறைகள் மற்றும் ஆதரவுடன் நான்கு தசாப்த காலத்துக்கும் மேலாக SOS Children's Villages Sri Lanka அவர்களுக்கு ஆதரவளித்து வந்துள்ளது. இந்த நிறுவனம் வழங்கியுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாக இலங்கையில் 4,000 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பயன்பெற்றுள்ளனர். தற்போது Uber Eats பங்களித்துள்ள நிதியை அன்றாட உணவுகளை வழங்கவும் மற்றும் சிறுவர் மையங்களில் காணப்படும் வசதிகளைப் பேணிப் பராமரிக்கவும் இந்த நிறுவனம் உபயோகிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று ISO சான்றிதழ்களையும் பெற்ற இலங்கையின் முதல் வர்த்தக வங்கியாக NDB வங்கி ஒரு மைல்கல்லை எட்டியுள்ளது. தகவல் பாதுகாப்புக்காக ISO 27001:2022, வர்த்தக தொடர்ச்சி முகாமைத்துவத்துக்காக ISO 22301:2019, ஆகிய சான்றிதழ்களைப் பெற்றுள்ளதுடன், மிக சமீபத்தில், தகவல் தொழில்நுட்ப [IT] சேவை முகாமைத்துவதுக்காக ISO 20000:2018 சான்றிதழையும் பெற்றுள்ளது. நிகழ்வில் கல்ஹாரி கமகே (பிரதி முகாமையாளர் IT பாதுகாப்பு-NDB), அமில விதானகே (உதவி துணைத் தலைவர் -IT-NDB), லசந்த கங்கே (சிரேஷ்ட முகாமையாளர் IT-NDB), லசந்த மதுபால (உதவி துணைத் தலைவர் -IT-NDB), கெலும் எதிரிசிங்க (பிரதம நிறைவேற்றதிகாரி -NDB), இந்திக/குணவர்தன[ துணைத் தலைவர் –IT-NDB), ஷான் நாணயக்கார (வதிவிட பொதுமுகாமையாளர் - Bureau veritas Sri Lanka), கே.வி.வினோஜ் (பிரதி பிரதம நிறைவேற்றதிகாரி -NDB), ரந்திமா ஏக்கநாயக்க ( Bureau veritas Sri Lanka), சுபாஷ் டி சில்வா (முகாமையாளர் - Bureau veritas Sri Lanka), ரசிகா சம்பத் (தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புத் தலைவர்-NDB), விரக மஹேஷத் ஹிரிபிட்டிய மென்பொருள் அபிவிருத்தி தொழில்நுட்பத் தலைவர் -NDB) ஆகியோரைப் படத்தில் காணலாம்.**

## 2024 ஆம் ஆண்டுக்கான சில்லறை வர்த்தகத் துறை விருதை வென்றுள்ள சிங்கர் ஸ்ரீலங்கா



SINGER ஸ்ரீலங்கா பிஎல்சி, சில்லறை விற்பனைத் துறையிலோர் முன்னோடியாக, நிலைத்தன்மைக்கான உறுதியான அர்ப்பணிப்புக்காக மீண்டும் அங்கீகாரம் பெற்றுள்ளது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சிறந்த கூட்டாண்மை குடிமக்கள் நிலைத்தன்மை விருதுகள் - 2024 இல் சில்லறை வணிகத்துறை விருதைப் பெற்றுள்ளது.

சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG)கொள்கைகளை அதன் பெருநிறுவன மூலோபாயத்தில் பயணிப்பதில் SINGER தலைமைத்துவத்தை இந்த விருது அடிக்கோடிட்டுக் காட்டுவதோடு, நிலையான வணிக நடைமுறைகளில் முன்னோடியாக அதன் நிலையையும் உறுதிப்படுத்துகிறது.

சுற்றுச்சூழல் முன்னணியில் SINGER தொடர்ந்து புதுமைகளை நடத்தி வருகின்றது. 2013 ஆம் ஆண்டில் தென்கிழக்கு ஆசியாவில் R600a தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்திய முதல் நிறுவனமானது, இது ஆற்றல்-திறனுள்ள குளிரூட்டியாகும். இது அதன் குறைவான சுற்றுச்சூழல் தாக்கத்துக்காக பரவலான வரவேற்பையும் பெற்றது. மேலும், SINGER உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகளுக்கான காகிதக் கூழ் பேக்கேஜிங்கை ஏற்றுக்கொண்டது. ஸ்டைரோஃபோம் கழிவுகளை கணிசமாகக் குறைத்துள்ளது, அதே நேரத்தில், நீர் பம்ப் உற்பத்தியில் மறுசுழற்சி செய்யப்பட்ட வார்ப்பிரும்பு அதன் பயன்பாடு வட்ட பொருளாதார நடைமுறைகளுக்கு வலுவான அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது.

## ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சியின் தலைவியாக அனிகா சேனாநாயக்க



ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி, 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் தனது புதிய தலைவியாக அனிகா சேனாநாயக்கவை நியமிப்பதாக அறிவித்துள்ளது.

தொலைத்தொடர்பு, பண்டகசாலை மற்றும் பொருள் இடப்பெயர்வு (warehousing and logistics), ஊடகம் மற்றும் ஒளிபரப்பு, ஒட்டோமொபைல், வான் பயணம் (aviation), பண்டகசாலை, உணவு மற்றும் பானங்கள் பதப்படுத்தல் மற்றும் பொதியிடல் உள்ளிட்ட துறைகளில் ஈடுபட்டுள்ள IWS Holdingsஇல் 15 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ள அனிகா, சிறந்த தலைமைத்துவத்தை ஜனசக்தி காப்புறுதிக்கு கொண்டு வருகிறார். பெரு நிறுவன திட்டமிடல் மற்றும் மூலோபாய வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள பரந்தளவிலான நிபுணத்துவம், நிறுவனத்தை அதன் அடுத்த கட்ட வளர்ச்சியில் வழிநடத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும்.

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் தலைமைத்துவக் குழுவுக்கு வலுவூட்டும் வகையில், தலைவியாகத் தனது புதிய பதவியில் தொலைநோக்கு பார்வையைக் கொண்டு வர அனிகா தயாராக உள்ளார். சிக்கலான, பன்முக வணிகங்களை நிர்வகிப்பதில் நிரூபிக்கப்பட்ட அவரது திறமை, இலங்கையின் போட்டித்தன்மை வாய்ந்த காப்புறுதிச் சந்தையில் தனது கால்தடத்தைத் தொடர்ந்து விரிவுபடுத்தி வரும் ஜனசக்திக்கு மூலோபாய வழிகாட்டல் மற்றும் ஆதரவை வழங்கும்.

அவர் தற்போது IWS Holdings (Private) Limited, RAD Productions (Private) Limited, RAD Productions USA LLC, Ceylon Natural Rubber (Pvt) Ltd, Scan Furniture (Private) Limited ஆகியவற்றில் இயக்குநராகப் பணியாற்றுவதுடன் மேலும் இலங்கை இயக்குநர்கள் நிறுவனத்தின் இளம் இயக்குநர் மன்றத்தின் குழு உறுப்பினராகவும் உள்ளார். அவரது பரந்த அனுபவப் பின்னணி 2020இல் ஒய்வு பெறும் வரை சம்பத் வங்கி பிஎல்சியில் சுயாதீனமான, நிர்வாகமற்ற இயக்குநர் மற்றும் ART Television Broadcasting Coவின் தலைமை நிர்வாக அதிகாரி போன்ற குறிப்பிடத்தக்க கடந்தகால பதவிகளை உள்ளடக்கும். பல்வேறு துறைகளில் பணியாற்றிய அனிகாவின் தலைமைத்துவ அனுபவம், ஜனசக்தி காப்புறுதியின் தொடர்ச்சியான வெற்றிக்கு மதிப்புமிக்க நுண்ணறிவு மற்றும் மூலோபாய வழிகாட்டுதலை வழங்க அவரை வழிநடத்தும்.

பதில் தலைவராகப் பணியாற்றி வரும் பிரகாஷ் ஷாஃப்டர், தனது புதிய பதவிக்கு அனிகா காலடி எடுத்து வைக்கும் போது சுமூகமான மாற்றத்தையும் மூலோபாய மேற்பார்வையையும் உறுதி செய்து, நிர்வாகத் துணைத் தலைவியாகத் தனது பதவியைத் தொடர்வார். தனது பரந்த அனுபவம் மற்றும் சிறந்த தலைமைத்துவத் திறன்களுடன் அனிகா ஜனசக்தி காப்புறுதியை அதன் அடுத்த அத்தியாயத்துக்கு கொண்டு செல்லவுள்ளதுடன் காப்புறுதித் துறையில் அதன் சிறந்த பாரம்பரியத்தைத் தொடர்வதையும் உறுதி செய்யவுள்ளார்.

## mesoestetic உடன் இணைந்து சருமப் பராமரிப்பை மேம்படுத்தும் OMED Pharmaceuticals





இலங்கையில் உயர்தர சர்வதேச சருமப் பராமரிப்பு மற்றும் அழகியல் வர்த்தக நாமங்களுக்கான முன்னணி விநியோகஸ்தர் மற்றும் பிரத்தியேக முகவராகத் திகழும் OMED பார்மாசூட்டிகல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், [OMED Pharmaceuticals (Pvt) Ltd] ஆனது மருத்துவ அழகுசாதன மற்றும் அழகியல் மருத்துவத் துறையில் உலகளாவிய முன்னணி நிறுவனமான mesoestetic உடன் இணைந்து அண்மையில் Elevate by Jetwing இல் பிரத்தியேக வாடிக்கையாளர் நிகழ்வை நடத்தியது. இதில் அதன் அதி நவீன தயாரிப்புகள் மற்றும் கல்வி வளங்களுடன் ஈடுபாடுடைய இலங்கையில் உள்ள சருமப் பராமரிப்பு தொழில்சார் நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

பிரத்தியேகமாக சரும மருத்துவர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வானது , mesoestetic அதன் உள்நாட்டு பங்குதாரரான OMED Pharmaceuticals மூலம் நாட்டுக்கு உயர்தர, பரிசோதனை செய்யப்பட்ட சருமப் பராமரிப்புத் தீர்வுகளை வழங்கும் சிறந்த அர்ப்பணிப்பான செயலை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது. இந்த ஒத்துழைப்பானது பல்வேறு சருமப் பராமரிப்புத் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும் சரும மற்றும் அழகியல் பராமரிப்புக்கான அறிவியல் பூர்வமான மற்றும் பயனுள்ள தயாரிப்புகளை உறுதி செய்வதிலும் முன்னேற்றமான ஆய்வு அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் (R&D&I) ஆகியவற்றுக்கான வர்த்தக நாமத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறது. 44% ஆய்வு அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் [R&D&I] வரவு - செலவுத் திட்டத்துடன் mesoestetic இன் முன்னேற்ற செயற்பாடுகள் மருத்துவமனைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களுடன் தொடர்ந்து ஆய்வு மற்றும் ஒத்துழைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், நிறுவனம் இவற்றுடன் இணைந்து புதிய சிகிச்சைகளை ஆய்வு செய்து மேம்படுத்துகிறது.

## செலான் வங்கி Kedalla Art of Living 2024 உடன் 12ஆவது தடவை Title Partnerஆக கைகோர்ப்பு








இலங்கை வங்கித் துறையில் நம்பகரமான பெயரான செலான் வங்கி, Kedalla Art of Living 2024 கண்காட்சியுடன் தொடர்ந்து 12ஆவது தடவையாக அதன் Title Partnerஆக பெருமையுடன் இணைந்தது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வாழ்க்கை முறை சார்ந்த கண்காட்சியான இது புதுமையான வாழ்க்கை முறைத் தீர்வுகளைத் தேடும் 12,000க்கும் மேற்பட்ட பார்வையாளர் களை ஈர்த்தது.

Asia Exhibition and Conventions Pvt. Ltd.ஆல் தொடர்ந்து 18ஆவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்ட Kedalla Art of Living Exhibition கண்காட்சியானது, 200க்கும் மேற்பட்ட வர்த்தக காட்சிக்கூடங்களில் பரந்தளவிலான தயாரிப்புகள் மற்றும் சேவைகளைக் கொண்டிருந்தது. கண்காட்சியாளர்கள் வீட்டு உபயோக மற்றும் அலங்காரப் பொருட்கள், real estate, நிலவடிவமைப்பு தெரிவுகள், தளபாடங்கள், டைல்கள், குளியலறை பொருத்துதல்கள், ஒளியூட்டும் தீர்வுகள் என பலவற்றைக் காட்சிப்படுத்தினர். இது வீட்டு உரிமையாளர்களுக்கு அவர்களின் அனைத்து வாழ்க்கை முறைத் தேவைகளையும் நிறைவேற்றும் தளத்தை வழங்கியது.

Title Partnerஆக செலான் வங்கி கண்காட்சியில் முக்கிய இடத்தைப் பிடித்ததுடன் பங்கேற்பாளர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட நிதித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கியது. வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறை மற்றும் நிதி அபிலாஷைகளை அடைவதற்கென வடிவமைக்கப்பட்ட வங்கியின் வீடமைப்பு மற்றும் தனிநபர் கடன்கள், சூரிய மின்சக்தி கடன்கள், லீசிங் வசதிகள், கடனட்டைகள்,நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகள் என பல்வேறு சலுகைகள் இதில் உள்ளடங்கும்.

செலான் வங்கியின் பங்கேற்பின் முக்கிய நோக்கம் வீட்டு உரிமையாளர்களை வலுப்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பு ஆகும். சிறப்பு வட்டி வீதங்களுடன் வீட்டு நிதியைப் பெறுவதற்கான நிபுணத்துவ வழிகாட்டுதலை வழங்குவதற்காக அர்ப்பணிப்புள்ள வீட்டுக் கடன் நிபுணர்களின் குழுவை வங்கி நியமித்திருந்தது. தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவு மற்றும் செயற்திறன் மிக்க தகவல்தொடர்பு மூலம் வாடிக்கையாளர்கள், தடையற்ற கடன் விண்ணப்ப செயல்முறையூடாக வழிநடத்தப்பட்டனர்.

செலான் வங்கி வீடுகளை வாங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு நிலம் ஒன்றை வாங்குவதற்கு அல்லது நிலவடிவமைப்புத் திட்டங்களுக்கு விசேட வட்டி வீதங்க ளுடன் செயலாக்க கட்டணத்தில் 50% தள்ளுபடியையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் பதிவு செய்தவர்களுக்கு சிறப்புக் கட்டணத்தில் சூரிய மின்சக்தி கடன்களும் கிடைத்தன. கண்காட்சிக்கு மேலும் மதிப்புச் சேர்க்கும் வகையில், செலான் வங்கி தினசரி குலுக்கல் போட்டியை நடத்தி அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு தினமும் மதிப்புமிக்க பரிசு வவுச்சர்களை வழங்கியது.

செலான் வங்கியின் நிதித் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய மேலதிக தகவலுக்கு, 011-200 88 88 என்ற விசேட தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

# ஹசீனாவை நாடு கடத்த பங்களாதேஷ் வலியுறுத்து



இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்த அந்நாடு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்தியாவுக்கு ராஜீய ரீதியில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத் துறை ஆலோசகர் தௌஹித் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

### 50,000 ஆண்டுகள் பழைமையான

# மாமூத் யானையின் உடல் கண்டெடுப்பு!



சைபீரியாவிலுள்ள யாகுடியா பகுதியில் பெர்மாஃப்ரோஸ்ட் எனப்படும் உறைநிலையிலுள்ள இடத்திலிருந்து சுமார் 50,000 ஆண்டுகள் பழைமையான மாமூத் யானைக்குட்டியின் உடலை ரஷ்ய ஆய்வாளர்கள் கண்டெடுத்தனர்.

இது பெண் யானை என்று அறியப்படும் நிலையில், இதற்கு 'யானா' என்று பெயர் சூட்டியுள்ளனர். உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மாமூத் யானை உடல்களில் இதுவே மிகச் சிறப்பாக பதப்படுத்தப்பட்ட நிலையில் இருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

# சிக்கியது 'குருவி'



சென்னை விமான நிலையத்தில் 3.6 கிலோ உயர் ரக ஹைட்ரோபோனிக் கஞ்சா கடத்தி வந்த இளைஞனை சுங்கத்துறை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் 'சர்வதேச போதைப்பொருள் கடத்தல் குருவி' என்பது தெரியவந்தது. இவர் யாருக்காக போதைப்பொருட்களைக் கடத்தி வந்தார். அவரது பின்னணியில் இருக்கும் 'நெட்வொர்க்' யார் என்பது பற்றி சுங்கத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

### கிறிஸ்மஸ் சந்தை கார் தாக்குதல்:

# முன்கூட்டியே ஜேர்மனியை எச்சரித்தோம் என்கிறது சவூதி

ஜேர்மனியில் கிறிஸ்மஸ் சந்தையில் கார் தாக்குதல் நடத்திய தலீப் அல்-அப்துல்மோசன் குறித்து ஜேர்மனியிடம் முன்கூட்டியே தாங்கள் எச்சரித்ததாகவும் அதை அந்த நாட்டு அதிகாரிகள் அலட்சியம் செய்துவிட்டதாகவும் சவூதி வெளியுறவுத் துறை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலீப் அல்-அப்துல்மோசனின் தீவிரவாதப் போக்கு குறித்து ஜேர்மனியின் மூன்று உளவு அமைப்புகளிடம் சவூதி வெளியுறவுத் துறை அமைச்சு தொடர்ந்து எச்சரிக்கை விடுத்துவந்தது. இருந்தாலும், அவர் சவூதி அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக்கொண்டவர் என்பதால் அந்த எச்சரிக்கைகளுக்கு ஜேர்மனி அதிகாரிகள் உரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை - என்றார்.

# துருக்கி ஆயுதத் தொழிற்சாலையில் வெடி விபத்து; 12 பேர் பரிதாபப் பலி



துருக்கியின் பிலிகிசர் மாகாணத்திலுள்ள கரேசி என்ற வடமேற்கு துருக்கியில் ஆயுதத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளதுடன், நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பிலிகிசர் மாகாணத்தில் அமைந்துள்ள தொழிற்சாலையில் நேற்று (24) புல்லட் காப்ஸ்யூல் தயாரிக்கப்படும் பகுதியில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். வெடி விபத்தில் காப்ஸ்யூல் தயாரிப்பு கட்டடம் இடிந்து விழுந்ததாகவும் சுற்றியுள்ள கட்டடங்கள் சிறியளவில் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மின்வெட்டு காரணமாக கட்டடத்துக்குள் இருக்கக்கூடியோரை மீட்பதற்காக தீயணைப்பு வீரர்கள் மற்றும் சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. வெடிப்புக்கான காரணத்தை விசாரிக்க குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

# ஹனியே - நஸ்ரல்லாஹ்வை கொன்றோம்; ஹமாஸ் - ஹிஸ்புல்லாஹ்வை வீழ்த்திவிட்டோம்!

## "இன்னும் அவ்வமைப்புகளின் தலைவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் தலையைத் துண்டிப்போம்" - என்கிறார் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ்



ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியேவின் இறுதி ஊர்வலத்தின்போது....

"ஹனியே, நஸ்ரல்லாஹ்வை கொன்றோம்; ஹமாஸ், ஹிஸ்புல்லாக்களை வீழ்த்திவிட்டோம். இன்னும் அந்த அமைப்புகளின் தலைவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் தலையைத் துண்டிப்போம்" - என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் (Katz) தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில், இப்போர் இன்று ஓராண்டைக் கடந்தும் நீடித்து வருகிறது. இந்நிலையில், காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 45,338இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,07,764இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் தொடங்கிய போர் இன்று மத்திய கிழக்கு முழுவதும் விரிவடைந்துள்ளது. தொடர்ந்து லெபனானில் ஹிஸ்புல்லாஹ்க்கள், யேமனின் ஹவுதிகள் என்று தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியது.

இந்நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் தெரிவித்துள்ளதாவது,

"ஹவுதிகள் இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகளைச் செலுத்தும் இந்த நாளில் நான் சில விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் ஹமாஸ்களை, ஹிஸ்புல்லாக்களை வீழ்த்திவிட்டோம். ஹனியே, நஸ்ரல்லாஹ்க்களை வீழ்த்திவிட்டோம். இன்னும் அந்த அமைப்புகளின் தலைவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் தலையைத் துண்டிப்போம்.

ஈரானின் பாதுகாப்பு அமைப்புகளை ஒடுக்கிவிட்டோம். சிரியாவில் அல்-அசாத் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டோம். தீவிரவாத அச்ச ரேகைக்கு பெரிய அடி கொடுத்துள்ளோம். அதேபோல் யேமனிலுள்ள ஹவுதிகளுக்கு கடுமையான பதிலடி கொடுப்போம். ஹவுதிகளின் உட்கட்டமைப்பு உத்திகளைத் தவிடுபொடியாக்குவோம். செங்கடலில் சரக்குக் கப்பல்களுக்கு அவர்கள் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களை முறியடிப்போம். பலஸ்தீனத்துக்கு ஆதரவாக செயற்பட்டு அவர்கள் இஸ்ரேலுக்கு நெருக்கடி தருகிறார்கள்" - எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த ஜூலை மாதம் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார். ஈரான் புதிய ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் பங்கேற்கச் சென்ற அவர் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டார். ஹனியே கடந்த 1987ஆம் ஆண்டு ஹமாஸ் படையில் இணைந்தார். இஸ்ரேலுக்கு எதிரான முதல் புரட்சியில் அவர் பங்கேற்றார். 1993ஆம் ஆண்டு வரை நடந்த அந்த மோதலில் அவர் முக்கிய பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

லெபனானில் கடந்த 1985ஆம் ஆண்டில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்புக்கு ஈரானும் சிரியாவும் ஆயுத உதவி, நிதியுதவியளித்தன. இரு நாடுகளின் உதவியால் ஹிஸ்புல்லாஹ் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்தது. கடந்த 2006ஆம் ஆண்டு ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்குமிடையே 34 நாட்கள் போர் நடைபெற்றது. அப்போது ஐ.நா. சபை தலையிட்டதால் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

ஈரான், சிரியாவின் ஆதரவுடன் ஹிஸ்புல்லாஹ் மீண்டும் தலைதூக்கியது. அந்த அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லாஹ், லெபனானின் இரகசிய இடங்களில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். ஈரானின் மூத்த தலைவர்கள், ஹிஸ்புல்லாஹ்வின் மூத்த தலைவர்களுக்கு மட்டுமே அவரின் இருப்பிடம் தெரியும். இந்நிலையில், கடந்த செப்டெம்பர் மாதம் ஹிஸ்புல்லாஹ் தலைவர் ஹசன் நஸ்ரல்லாஹ் கொல்லப்பட்டார்.

தொடர்ந்து கடந்த ஒக்டோபர் மாதம், காஸாவில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையில் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வரும் கொல்லப்பட்டார். இவற்றையெல்லாம் பட்டியலிட்டே தற்போது இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தீவிரவாதத்தை ஒழித்து வருவதாகப் பேசியுள்ளார்.

# பணயக்கைதிகளை மீட்கும்வரை போர் தொடரும்

## நெதன்யாஹு சூளுரை



"பணயக்கைதிகளை நாங்கள் கைவிடமாட்டோம். அவர்களை மீட்கும் வரை நாங்கள் போரை நிறுத்த மாட்டோம்" - என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு உறுதியளித்துள்ளார்.

இதுகுறித்து நெதன்யாஹு மேலும் தெரிவிக்கையில்,

காஸாவிலிருந்து பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் செய்கிற அனைத்து வேலைகளையும் வெளியே சொல்ல முடியாது. பணயக்கைதிகளை மீட்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பணயக்கைதிகள் அனைவரையும் வீட்டுக்கு அழைத்து வரும் வரை போரை நிறுத்த மாட்டோம். பணயக்கைதிகளை மீட்கும் முயற்சியில் சில முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பணயக்கைதிகளின் குடும்பத்தினருக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் அவர்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறோம். பணயக்கைதிகளை நாங்கள் கைவிடமாட்டோம் -என்றார்.

# ரஷ்யாவசமான உக்ரைன் கிராமங்கள்

கிழக்கு உக்ரைனின் மேலும் இரு கிராமங்களை ரஷ்யா கைப்பற்றியுள்ளது.

இதுகுறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன்தினம் (23) வெளியிட்ட அறிக்கையில், "வடகிழக்கு கார்கிவ் பிராந்தியத்தின் லொஸோவா கிராமத்தையும் க்ரஸ்னோயே கிராமத்தையும் உக்ரைன் பிடியிலிருந்து ரஷ்ய இராணுவம் விடுவித்தது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 700 அடி ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்த 3 வயதுச் சிறுமி

## ராஜஸ்தானில் சம்பவம்; மீட்புப் பணிகள் தீவிரம்





ராஜஸ்தானில் 700 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில், சென்ட்டா என்ற 3 வயதுச் சிறுமி விழுந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குழந்தையை மீட்கும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

ராஜஸ்தான் மாநிலம் கோட்புட்லி-பெஹ்ரோர் மாவட்டத்தில் 700 அடி ஆழம் கொண்ட ஆழ்துளைக் கிணற்றுக்கருகில் சென்ட்டா என்ற 3 வயதுச் சிறுமி நேற்றுமுன்தினம் (23) விளையாடி கொண்டிருந்த நிலையில் திடீரென காணாமல் போயுள்ளார். இதனையறிந்து பதறிப்போன தந்தை சிறுமியை தேடிய நிலையில், சிறுமி ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதனையடுத்து அவரே குழந்தையை மீட்க சிறிதுநேரம் போராடிப் பார்த்துள்ளார். ஆனால், முடியவில்லை. குழந்தையின் உறவினர்கள் மற்றும் அக்கம்பக்கத்தினர் குழந்தையை மீட்க முயற்சி செய்தனர். எல்லா முயற்சியும் தோல்வியில் முடியவே மீட்புப் படை அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த தேசிய மீட்புப் படை அதிகாரிகள் மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் சிறுமியை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சிறுமியை பத்திரமாக மீட்க வேண்டுமென பெற்றோர், உறவினர்கள் ஆழ்துளைக் கிணறு அருகே காத்திருக்கின்றனர்.

கடந்த டிசம்பர் 11ஆம் திகதி, தவுசா மாவட்டத்தில் 150 அடி ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 5 வயதுச் சிறுவன் 3 நாட்கள், நீண்ட மீட்பு நடவடிக்கைக்குப் பிறகு மீட்கப்பட்டான். எனினும், முயற்சிக்குப் பலன் கிடைக்கவில்லை. அந்த 5 வயதுச் சிறுவன் உயிரிழந்துவிட்டான் என்பது குறிப்பிடத்தக்கது.

# "கிரீன்லாந்து எங்களுடையது; விற்பனைக்கல்ல"

## ட்ரம்ப் ஆசைக்கு அணை போட்ட மூட் எகெடே



"கிரீன்லாந்தின் உரிமையும் கட்டுப்பாடும், அமெரிக்காவுக்கு அவசியம்" - என்று தெரிவித்துள்ள ட்ரம்ப்பின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந்நாட்டு பிரதமர் மூட் எகெடே "கிரீன்லாந்து எங்களுடையது. விற்பனைக்குக் கிடையாது. ஒருபோதும் விற்பனைசெய்ய மாட்டோம்" - எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

தங்கள் நாட்டின் விமானப்படைத்தளம் கிரீன்லாந்தில் இருப்பதால், இதை தங்களுக்கே சொந்தமாக்க அமெரிக்கா விரும்புகிறது. கடந்த தடவை ஜனாதிபதியாக இருந்தபோது ட்ரம்ப் இந்தக் கருத்தை வெளிப்படையாக தெரிவித்திருந்தார். இதற்கு கிரீன்லாந்தும் டென்மார்க்கும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தன. இந்நிலையில், புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள ட்ரம்ப் மீண்டும் தன் ஆசையை வெளிப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து ட்ரம்ப் தமது சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக கிரீன்லாந்தின் உரிமையும், அதன் கட்டுப்பாடும் அமெரிக்காவுக்கு அவசியமாகவுள்ளது" - எனத் தெரிவித்துள்ளார். அவரது இந்தக் கருத்துக்கு, கிரீன்லாந்து கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அதற்கு, "கிரீன்லாந்து எங்களுடையது. விற்பனைக்குக் கிடையாது. ஒருபோதும் விற்பனைசெய்ய மாட்டோம்" என்று பிரதமர் மூட் எகெடே (Mute Egede) கருத்துத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் விருப்பத்தை முறியடிக்க வேண்டும். இதனை கடுமையாக எதிர்க்க வேண்டும் என்று பாராளுமன்றத்தின் பாதுகாப்புக் குழுவின் தலைவர் ஜோர்லோவ் தெரிவித்துள்ளார். ட்ரம்ப்பின் கருத்துக்கு டென்மார்க் நாடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, பனாமா கால்வாய் வழியாகச் செல்லும் அமெரிக்க கப்பல்களுக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. இதனை நிறுத்தாவிட்டால், அதனை அமெரிக்காவே எடுத்துக்கொள்ளும் என ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். ட்ரம்பின் இந்தக் கூற்றுக்கு பனாமா ஜனாதிபதி ஜோஸ் ரவுல் முலினோ (José Raúl Mulino) கண்டனம் தெரிவித்தார்.

"பனாமா கால்வாயின் ஒவ்வொரு சதுர மீற்றரும் எங்களுடையது. அதைச் சுற்றியுள்ள பகுதியும் எங்களுடையது. பனாமாவின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்தில் எந்த சமரசமும் செய்யப்பட மாட்டாது" - என ஜனாதிபதி முலினோ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கொதிக்கும் கிலாவியா: எந்நேரமும் வெடிக்கலாம்

அமெரிக்காவின் ஹவாய் தீவில் அமைந்துள்ள கிலாவியா எரிமலை கொதிக்கத் தொடங்கிள்ளது. எந்நேரமும் வெடிக்கும் அபாயமுள்ளதென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க நிலப்பரப்பிலிருந்து தென்மேற்கே 2000 மைல்களுக்கப்பால் அமைந்துள்ள ஹவாய் தீவிலுள்ள 5 பெரிய எரிமலைகளில் கிலாவியா எரிமலையும் ஒன்றாகும்.

இந்த எரிமலையில் 1983ஆம் ஆண்டு முதல் தீக்குழம்பு தொடர்ந்து வெளியேறி வருகிறது. இந்த எரிமலை 4 ஆயிரம் அடி உயரம் கொண்டது. கடந்த 2018ஆம் ஆண்டு மே மாதம் வெடித்துச் சிதறியது. எரிமலைக் குழம்பில் 700 வீடுகள், சுற்றுலா மையங்கள், வீதிகள் சேதமடைந்தன. கடந்த 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மீண்டும் வெடித்துச் சிதறியது. அப்போதும் பெரும் சேதம் ஏற்பட்டது.

தற்போது மீண்டும் எரிக்குழம்பு கொதிக்கத் தொடங்கியது. எந்நேரமும் தீப்பிழம்புகளை வெளியேற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வீடுகள் உள்ளிட்டவை சேதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கிலாவியா எரிமலை ஆண்டு முழுவதும் கொதித்துக்கொண்டே இருக்கும் எரிமலையாகும். கடந்த 200 ஆண்டுகளாக தொடர்ந்து வெடித்து வருகிறது. ஹவாய் எரிமலை ஆய்வகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதனை ஆராய்ந்து வருகின்றனர்.

# நத்தார் தின வாழ்த்துச் செய்திகள்

## இறைமகன் இயேசுவின் போதனைகளைக் கடைப்பிடிப்போமாக!

### பிரதி அமைச்சர் பிரதீப்



''விண்ணுலக தேவன் மண்ணுலகில் அவதரித்துப் பாவங்கள் போக்கிடப் பாரினில் வந்துதித்த இயேசு பாலகன் பிறந்த நன்னாள் இந்நாளாகும். இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் மலர்ந்த இந்நத்தார் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் இனிய நத்தார் தின நல்வாழ்த்துகள்'' - என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இறைமகன் இயேசு மனிதராய் அவதரித்த இப்புனித நாளில் காலாகாலமாக எம் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்ட இனவாதம், மதவாதமற்ற அனைத்து இலங்கையரதும் மனங்களை வென்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் எதிர்பார்ப்பு, வளமான நாடு அழகான வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதாகும். வளமிக்க நாடாக முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமென்றால் நாம் இறைமகன் போதித்த அன்பு, பணிவு சகோதரத்துவத்தைப் பகிர்ந்து வாழ்தல் எனும் உயரிய நெறிகளை வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலமே நாம் இலங்கையர் என்ற ரீதியில் எமது இலக்கை அடைய முடியும். ஒருவருக்கொருவர் பகைமையும் காழ்ப்புணர்ச்சி, அரசியல் சூழ்ச்சிகளை நீக்கி, இறைமகன் இயேசு போதித்ததுபோல ''நான் உங்களில் அன்பா யிருப்பதுபோல, நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பா யிருக்கவேண்டும்'' - என்ற கட்டளைக்கிணங்க ஒருவரில் ஒருவர் அன்பாயிருந்து, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வில் எல்லோருடைய அன்பையும் ஆதரவையும் பெற்று அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

## மனிதர்களுக்கு மன்னிக்கக் கற்றுக்கொடுத்த மகான் இயேசு

### சமூக செயற்பாட்டாளர் ஆனந்தகுமார்



" இயேசு போதித்த அன்பு, எளிமை, கருணை போன்ற உயரிய குணங்களைப் பின்பற்றி நாம் அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும். அதேபோல நாட்டை முன்னேற்ற ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" - என அரசியல், சமூக செயற்பாட்டாளரான சுப்பையா ஆனந்தகுமார் தமது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"சமத்துவம், சகோதரத்துவம், ஈகை ஆகிய மனிதநேயப் பண்புகளின் விழாவாக அன்பைப் பரிமாறி, ஏழை எளியோருக்கு உதவும் திருநாளாக நத்தார் தினம் அமைந்திருக்கிறது.

மனிதர்களுக்கு மன்னிக்கக் கற்றுக்கொடுத்த மகான் இயேசுவின் பிறந்தநாளை திருநாளாகக் கொண்டாடும் கிறிஸ்தவ மக்களுக்கு இத்தருணத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தி படைத்தவை. எனவே, நீதியின் வழி நடப்போம். நேர்மையாக செயற்படுவோம். பிறருக்கு உதவுவோம். அன்பால் உலகை வெல்வோம். அதற்கான உறுதிமொழியை இந்நன்னாளில் ஏற்போம்.

எமது நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருகின்றது. தற்போதையதை விடவும் அடுத்த நத்தார் பண்டிகை மேலும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் நாட்டை மேம்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைவோம்" – என்றுள்ளது.

## மானிட சமூகத்துக்கு அன்பையும் சமாதானத்தையும் போதிக்கும் அடையாளமே நத்தார் பண்டிகை



### இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான்

இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன் தொடர்புடைய நத்தார் பண்டிகையானது, இலங்கை மற்றும் உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களால் மாத்திரமன்றி முழு மானிட சமூகத்துக்கிடையில் பிரிக்க முடியாத தொடர்புகளைப் பலப்படுத்துகின்ற மகிழ்ச்சிகரமான ஒரு நன்னாளாகுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தமது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சமூகத்தின் நல்வாழ்வைபோன்று, பாவத்தின் இருளை அகற்றுவதே இயேசு கிறிஸ்து போதித்த உன்னத செய்தியாகும். சமாதானம், கருணை, இரக்கம் போன்ற வழிகாட்டல்களின் மூலம் தவறான புரிதலை நீக்கப்பெற்ற சுபீட்சமான வாழ்க்கை நெறிக்கு இந்தப் போதனைகள் வழிகாட்டுகின்றன.

மானிட சமூகம் ஒவ்வொருவர் மீதும் இரக்க குணத்துடனும் அன்புடனும் வாழ்தல் மற்றும் சமுதாயத்தில் அல்லலுரும் மக்களுக்கு ஆதரவளித்தல் மூலம் இறைவனின் அன்பை உண்மையாகவே ஒவ்வொருவரினதும் வாழ்க்கையில் கண்டுகொள்ள முடியும் என்பதை இயேசு கிறிஸ்து போதித்தார்.

எனவே, நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தி கிடைக்கட்டும். உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் தின நல்வாழ்த்துகள் - என்றுள்ளது.





"துவிச்சக்கரவண்டி பாவனை மூலம் தேக சுகம் மற்றும் சுகாதாரத்தை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் கண்டி, கட்டம்பே நகரசபை விளையாட்டு மைதானத்தில் மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் நிஹால் அழகக்கோன், கண்டி மாநகர ஆணையாளர் இந்திக குமாரி அபேசிங்க உட்பட அனுசரணையாளர்கள், விளையாட்டு அதிகாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுநர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (படங்கள்: பேராதனை நிருபர்)

## தேயிலைத் தொழிற்றுறை முடங்கும் நிலை!

### தோட்ட உரிமையாளர்கள், முகாமையாளர்கள் கவலை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்ட தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் பல்வேறு நெருக்கடிகளுக்குத் தாம் முகங்கொடுத்து வருவதாக இரத்தினபுரி தோட்ட உரிமையாளர்கள், முகாமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தேயிலைத் தோட்டங்களைத் துப்புரவு செய்தல், கொழுந்து பறித்தல், கான் வெட்டுதல் உட்பட பல்வேறு வேலைகளுக்கு தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் தோட்டத்துறை சிறப்பாக இயங்கிவந்தபோதிலும், தற்போது பணியாளர்களின் முதுமை, அவர்களின் பிள்ளைகள் வேலை நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்லல் ஆகிய காரணங்களால் இத்தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, இதற்கான பிரதான காரணம் தோட்ட நிர்வாகங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குரிய நியாயமான ஊதியத்தை வழங்காமை, தோட்டக் கம்பனிகளின் அடக்குமுறை, புறக்கணிப்புகளென தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் தேயிலைத் தொழிற்றுறை முழுமையாக முடங்கும் நிலை ஏற்படுமென தோட்ட உரிமையாளர்கள், முகாமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.





இயேசுவின் பிறப்பை முன்னிட்டு ஊவா மாகாண கலாசார அமைச்சு நடத்திய நத்தார் கரோல் இசை நிகழ்ச்சி அமைச்சின் செயலாளர் நிஹால் குணரத்ன தலைமையில் ஊவா மாகாண சபை வளாகத்தில் நேற்று முன்தினம்(23) இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஊவா மாகாண ஆளுநர் சட்டத்தரணி ஜே.எம்.கபில ஜயசேகர, ஊவா மாகாண பிரதம செயலாளர் தமயந்தி பரணகம உட்பட அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதன்போது மாணவர்கள் கரோல் கீதம் இசைத்தமை குறிப்பிடத்தக்கது. (எம்.ஏ.எம்.ஹசனார்)

## ஹட்டன் பஸ் விபத்து: பஸ் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

ஹட்டனிலிருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ் கடந்த (21)மல்லியப்பு பகுதியில் வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்நிலையில் நேற்று முன்தினம் (23) நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரால் குறித்த பஸ் வண்டி பரிசோதிக்கப்பட்டது.

இதன்போது, விபத்துக்குள்ளான பஸ்ஸில் சாரதியின் கதவு பழுதடைந்திருந்தமையும் திடீரென கதவு திறந்தபோது இருக்கையிருந்த சாரதி தூக்கி வீசப்பட்டமையும் தெரியவந்துள்ளது.

ஹட்டன் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரின் வேண்டுகோளுக்கிணங்க பொலிஸ் பொறுப்பிலிருந்த குறித்த பஸ் வண்டியை பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் சோதனையிட்டார்.

இந்தச் சோதனையின்போது பஸ்ஸில் சாரதியின் கதவு நீண்டகாலமாக பழுதடைந்திருந்தமையும் குறித்த கதவை தற்காலிகமாக மூடுவதற்கு முறையொன்றை அவர்கள் கடைப்பிடித்திருந்தமையும் மோட்டார் வாகனப் பரிசோதகரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சாரதியின் இருக்கைக்கான பாதுகாப்பு பெல்ட் இருக்கவில்லை எனவும் பஸ்ஸினுள் பல்வேறு அலுமினிய சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்ததால் விபத்து காரணமாக பயணிகள் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேபோல், பஸ்ஸின் இருக்கைகள் தரமான முறையில் பொருத்தப்படாததால், அனைத்து இருக்கைகளும் கழன்று விழுந்து ஒன்றுடனொன்று மோதியதில் பலத்த காயம் ஏற்பட்டதாக மோட்டார் பரிசோதகர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

பயணிகள் போக்குவரத்து வாகனங்களில் எந்தவிதமான உபகரணங்களையும் பொருத்த அனுமதிக்க வேண்டாம் என்றும், பொருத்தப்பட்ட உபகரணங்களை அகற்றுமாறும் தலைமை மோட்டார் வாகனப் பரிசோதகர் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.தகுதியற்ற பஸ்ஸை இயக்கியமை தொடர்பில் பஸ்ஸின் உரிமையாளருக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.





நத்தார் பண்டிகையையொட்டி அவுஸ்திரேலியா சுற்றுலாப் பயணிகளினால் காலி, உனவட்டுன பிரதேசத்தில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் 50இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசிப்பொதிகள் நேற்று (24) பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன்போது காலி, உனவட்டுன பிரதேசத்தைச் சேர்ந்த நிஹால், அவுஸ்திரேலியா சுற்றுலாப் பயணிகள் இணைந்து அரிசிப்பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கினர். (படங்கள்:தலவாக்கலை நிருபர்)

# நத்தாரின் ஒளி நம் பாதைகளை வழிநடத்தட்டும்

### வட மாகாண ஆளுநர் வேதநாயகன்

(பு.கஜிந்தன்)



''நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பாலன் பிறப்பை நாம் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் கொண்டாடு கையில் நத்தார் தினத்தின் உண்மையான உணர்வை நினைவில் கொள்வோம்'' - என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தமது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''அன்பை - கருணையைப் பரப்புதல், மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களுக்கு இரங்குதல், உதவி செய்தல் மற்றும் அனைத்து சமூகங்களிடையேயும் நல்லிணக்கத்தை வளர்ப்பது என்ற எண்ணங்களை மனதிலிருத்துவோம்.

இந்த மகிழ்ச்சியான பண்டிகையை நாம் கொண்டாடும்போது, எம்மைச் சூழ்ந்திருப்பவர்களில் உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு நம் இதயங்களையும் கைகளையும் நீட்டுவோம்.

புத்தாண்டை நெருங்கிவரும் இவ்வேளையில், வடக்கு மாகாணத்துக்கும் எமது தேசத்துக்கும் அமைதி, செழிப்பு மற்றும் முன்னேற்றத்தை நோக்கி தொடர்ந்து பணியாற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

நத்தாரின் ஒளி நம் பாதைகளை வழிநடத்தட்டும். மேலும், இந்தப் பண்டிகையின் ஆசீர்வாதங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் மகிழ்ச்சியையும் நிறைவையும் கொண்டுவரட்டும்'' - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் கைக்குழந்தைகளை பயன்படுத்தி ஊதுபத்தி வியாபாரம்

### மௌனம் காக்கும் அதிகாரிகள்



(சிவகுமார் திவியா)

வவுனியா நகரில் வெளிநாட்டவர்களையும் பொதுமக்களையும் அசௌகரியப்படுத்தி கடைத் தொகுதி, வீதிகளில் கைக் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுடன் ஊதுபத்தி விற்பனை செய்பவர்கள் தொடர்பில் அதிகாரிகள் அல்லது பொறுப்புவாய்ந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஊதுபத்தி விற்கும் பெண்களின் தொல்லை நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் ஊதுபத்தி விற்பதுபோல் பெண்களை வசியப்படுத்தி நகைகளை பறிக்க முயற்சி செய்வதாகவும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவர்கள் ஒரு குழுவாகவே வெளியிடங்களிலிருந்து வருகை தந்து கைக்குழந்தையுடன் அமர்ந்திருக்கின்றனர். அதிகமானவர்கள் கர்ப்பிணித் தாய்மார்களாகவும் பாலூட்டும் தாய்மார்களாகவும் உள்ளனர். இதில் சிறுமிகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஊதுபத்தி விற்பனை செய்யும்போது ஊதுபத்தியைப் பார்த்துவிட்டு வாங்குவதற்கு தவறும் பட்சத்தில் பொதுமக்களையும் வெளிநாட்டவர்களையும் தகாத வார்த்தைகளால் அவதூறாகப் பேசுவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் நகரசபை மற்றும் பொலிஸார், சிறுவர் பாதுகாப்புப் பிரிவு, மாவட்ட செயலகம் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த சகலருக்கும் தெரிந்திருந்தும் தெரியப்படுத்தியிருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நடவடிக்கைகளால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

எனவே, பொறுப்பு வாய்ந்தவர்கள் இனிவரும் காலங்களில் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த 17 இந்திய மீனவர்கள் கைது!

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் உள்ளடக்கம்



(ஜோசப் நயன்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 17 இந்திய மீனவர்களை நேற்று செவ்வாய்க்கிழமை (24) அதிகாலை கைதுசெய்த கடற்படையினர் குறித்த மீனவர்களையும் படகுகளையும் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 17 மீனவர்களும் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்கள் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, மீனவர்கள் கைதுசெய்யப்பட்டதால் தங்கச்சி மடம் கிராமத்தில் இந்த ஆண்டு நத்தார் பண்டிகை கறுப்பு கிறிஸ்மஸாக மாறிவிட்டதாக சோகத்துடன் கூறும் மீனவர்களின் உறவினர்கள் மீனவர்களை உடனடியாக விடுதலைசெய்து தாயகம் அழைத்துவர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் (23) திங்கட்கிழமை 400க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப் படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடி அனுமதிச்சீட்டுப் பெற்று மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

மீனவர்கள் நள்ளிரவு சுமார் 12.30 மணியளவில் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்குமிடையே மீன்பிடித்துக்கொண்டிருக்கும்போது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தங்கச்சிமடத்தைச் சேர்ந்த பூண்டிராஜ் மற்றும் ஆரோன் ஆகியோருக்குச் சொந்தமான இரண்டு விசைப்படகையும் அதிலிருந்த 17 மீனவர்களையும் கைதுசெய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

கைதுசெய்யப்பட்ட 17 மீனவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களான 8 பேர் உள்ளடங்குகின்றனர். இதனால் குடும்பத்தினர் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இன்று (25) நத்தார் பண்டிகை என்பதால் வீட்டில் குழந்தைகளுக்குப் புத்தாடை வாங்கவும் நத்தார் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்காகவும் நேற்று முன்தினம் (23) மாலை 3 மணிக்கு மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர்களை நள்ளிரவு 12 மணியளவில் இலங்கைக் கடற்படை கைதுசெய்துள்ளது.

குறித்த மீனவர்கள் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'உண்மையின் தரிசனம்' நாட்டுக்கூத்து யாழில்



(பு.கஜிந்தன்)

காவேரி கலா மன்றத்தின் தயாரிப்பில் 'உண்மையின் தரிசனம்' நாட்டுக்கூத்து நிகழ்வு நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

காவேரி கலா மன்றம் கிறிஸ்து பிறப்பு நிகழ்வைப் பண்பாட்டு விழுமியங்களோடு இணைத்து கூத்து வடிவத்தில் கடந்த 26 வருடங்களாக நடத்தி வருகிறது.

அந்த வகையில், இந்த வருடம் உண்மையின் தரிசனம் யாழ்ப்பாணத்தில் மேசியா பூரண சுவிசேஷ சபை என்ற தேவாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த நாடகமானது காவேரி கலா மன்றத்தின் இயக்குநர் யோசுவாவின் எழுத்தாக்கம் மற்றும் நெறியாக்கத்தில் இடம்பெற்றது. பலநூறு மக்கள் வருகை தந்து, இந்த நாடகத்தைக் கண்டுகளித்தனர்.

## பலாலியில் இராணுவ வீரர் திடீரென உயிரிழப்பு

(பு.கஜிந்தன்)

பலாலி இராணுவ முகாமில் கடமை புரிந்த இராணுவ சார்ஜன்ட் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த றதித்த ரங்கன திசாநாயக்க (வயது 31) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (22) காலை அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. இதன்போது பலாலி இராணுவ வைத்தியசாலையில் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# முதல் வீரராக மோசமான சாதனையில் இடம்பிடித்த பாக். வீரர்



தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அப்துல்லா ஷபிக் ரன்கள் ஏதுமின்றி விக்கெட்டை இழந்ததன் மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் மிக மோசமான சாதனையை படைத்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ரன்கள் ஏதுமின்றி விக்கெட்டை இழந்த முதல் தொடக்க வீரர் எனும் சாதனையை இவர் படைத்துள்ளார்.

முன்னதாக, பார்ல் மற்றும் கேப்டவுனில் நடந்த முதல் மற்றும் இரண்டாவது ஒருநாள் போட்டிகளில் மார்கோ ஜான்சனின் பந்துவீச்சில் ரன்கள் ஏதுமின்றி விக்கெட்டை இழந்த அப்துல்லா ஷபிக், கடைசி ஒருநாள் போட்டியின் போது காகிசோ ரபாடா பந்துவீச்சில் 0 ரன்களில் வெளியேறியதன் காரணமாக இந்த மோசமான சாதனையை படைத்துள்ளார்.

இதற்கு முன் மூன்று போட்டிகள் கொண்ட இருதரப்பு ஒருநாள் தொடரில் சூர்யகுமார் தொடர்ந்து மூன்று முறை 0 அவுட்டாகியுள்ளார். அதன்படி அவர் கடந்தாண்டு அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின் மூன்று போட்டிகளிலும் டக் அவுட்டாகினார். இருப்பினும் அவர் மிடில் ஆர்டரில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக அதிக இன்னிங்ஸில் ரன்கள் ஏதுமின்றி விக்கெட்டை இழந்த வீரர்கள் வரிசையிலும் இரண்டாம் இடத்தை அப்துல்லா ஷபிக் பிடித்துள்ளார். இவரைத் தவிர்த்து இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர், அவுஸ்திரேலிய அணியின் ரிக்கி பொண்டிங், இலங்கை அணியின் ஜெயவர்தன, இந்திய அணியின் சூர்யகுமார் யாதவ், அவுஸ்திரேலியாவின் ஆண்ட்ரூ சைமண்ட்ஸ், ஷேன் வொட்சன், பாகிஸ்தானின் சல்மான் பட், ஷோயிப் மாலிக் உள்ளிட்ட பல வீரர்கள் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இந்த மோசமான சாதனையை படைத்துள்ளனர்.




# மைதானத்தில் ஆண் குழந்தையை பிரசவித்த ரசிகை

பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியின்போது மைதானத்தில் குழந்தை பிரசவித்த ரசிகைக்கு போட்டியின் போது மைதான அறிவிப்பு பலகையில் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜொஹனஸ்பேர்க்கில் இடம்பெற்ற 3ஆவது போட்டியை காண வந்த கர்ப்பிணி ரசிகைக்கு திடீரென வயிற்று வலி ஏற்பட்டது. உடனே மைதானத்தில் இருந்த மருத்துவ குழு உதவியுடன் அந்த பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தது. இதனையடுத்து அங்குள்ள விளம்பரப் பலகையில் இந்த தம்பதிக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.



# கண்டி அணி அமோக வெற்றி

(ஜே.எம்.ஹாபீஸ்)

முதல்தர கழகங்களுக்கிடையே இடம்பெற்ற றகர் போட்டியில் பிரபல கண்டி அணி இலங்கை இராணுவ றகர் அணியை மிக இலகுவாக வெற்றி பெற்றது.

கண்டி, நித்தவல மைதானத்தில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இப்போட்டியில் இப் பருவத்துக்கான தனது இரண்டாவது வெற்றியை கண்டி அணி பதிவு செய்தது.

இப்போட்டியில் முழுவதும் தனது ஆதிக்கை வைத்திருந்த கண்டி 70 - 14 என்ற அடிப்படையில் வெற்றி ஈட்டியது. போட்டியின் முதலாம் பாதி முடிவில் கண்டி அணி 39 - 5 என்ற புள்ளி வித்தியாசத்தில் முன்நிலை வகுத்து இரண்டாம் பாதி முடிவில் முழுப் போட்டியிலும் கண்டி 70 - 14 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

# ஆஸி. அணியுடனான தொடரிலிருந்து விலகிய ஷமி

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முஹமட் ஷமி உபாதை காரணமாக பார்டர்-கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் மீதமுள்ள இரண்டு போட்டிகளிலிருந்து விலகியுள்ளார்.

பிசிசிஐ வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பந்துவீசத் தொடங்கியதால், ஷமியின் இடது முழங்காலில் வீக்கம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய மருத்துவ மதிப்பீட்டின் படி, முழங்கால் முழுமையாக குணமடைய சில காலம் தேவைப்படும் என்பதால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஷமி தற்போது பிசிசிஐயின் சிறப்பு மருத்துவ குழுவின் மேற்பார்வையில் சிகிச்சை பெற்று வருகிறார். ஷமி, சமீபத்தில் நடைபெற்ற ரஞ்சி மற்றும் சையது முஷ்டாக் அலி கிண்ண தொடர்களில் சிறப்பாக செயற்பட்டிருந்தார். இதனால், அவுஸ்திரேலிய தொடரில் அவர் முக்கிய பங்கு வகிப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், இந்த திடீர் விலகல் அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.



# இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் இலங்கையில்

பாகிஸ்தானில் எதிர்வரும் பெப்ரவரியில் இடம்பெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தானுக்கு இந்திய அணி செல்லாது என ஐ.சி.சி. அறிவித்துள்ள நிலையில், 2026ஆம் ஆண்டு இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள ஐ.சி.சி.ரி 20 உலகக்கிண்ண தொடருக்கு பாகிஸ்தான் அணி இந்தியா செல்லாது என்பதால், 2026 ரி 20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதும் கிரிக்கெட் உலகின் எதிர்பார்ப்புமிக்க போட்டியானது இலங்கையில் நடைபெறவுள்ளது.



2026 ரி 20 உலகக்கிண்ணத்தில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் அரை இறுதியில் அல்லது இறுதிப் போட்டியில் சந்திக்க நேரிட்டால் அந்தப் போட்டியும் இலங்கையிலேயே நடத்தப்படும்.

நீண்ட இழுபறிகளுக்கு மத்தியில் 2025ஆம் ஆண்டு பெப்ரவரியில் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண தொடர் ஹைபிரிட் வடிவில் நடத்தவுள்ளதாக ஐ.சி.சி. கடந்த வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அதன்படி போட்டிகள் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடத்தப்படும். இந்தியா விளையாடும் போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறாது எனவும் டுபாயில் நடைபெறும் எனவும் ஐ.சி.சி. திட்டவட்டமாக கூறியுள்ளது.

மேலும் 2024 – 2027ஆம் ஆண்டு வரை இந்தியா, பாகிஸ்தான் மோதும் போட்டிகள், 2 அணிகளுக்கும் பொதுவான மைதானத்தில் நடைபெறும். 2025ஆம் ஆண்டு ஐ.சி.சி. மகளிர் கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை இந்தியா நடத்துகிறது. அதனைத் தொடர்ந்து 2026-ஆம் ஆண்டு ஐ.சி.சி. ஆடவர் ரி 20 உலகக்கிண்ணத்தை இந்தியா இலங்கையுடன் இணைந்து நடத்துகிறது. 2028ஆம் ஆண்டு ஐ.சி.சி. மகளிர் ரி20 உலகக்கிண்ணத்தை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் இந்த தொடர்களில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆடவர், மகளிர் எந்தவொரு ஆட்டமும் பொதுவான இடத்தில் நடைபெறவுள்ளது. 2025 ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான போட்டி அட்டவணை விரைவில் வெளியிடப்படவுள்ளது.

# ஸ்ரீ லங்கா ஜுனியர் ஓபன் கோல்ஃப் சம்பியன்ஷிப் தொடர் வெற்றிகரமாக நிறைவு



பிறீமா சன்ரைஸ் அனுசரணையில் இடம்பெற்ற நாட்டின் மிகவும் மதிப்புமிக்க ஸ்ரீ லங்கா ஜுனியர் ஓபன் கோல்ஃப் சம்பியன்ஷிப் தொடரானது, இலங்கை முழுவதிலும் உள்ள இளம் வீரர்களிடையே கோல்ஃப் மீதான ஒப்பிடமுடியாத ஆர்வத்தையும் திறமையையும் வெளிப்படுத்தி அமோக வெற்றியுடன் நிறைவடைந்தது.

தொடர்ச்சியாக 16ஆவது ஆண்டாக இடம்பெற்ற இந்த மதிப்புமிக்க போட்டித் தொடரானது, டிசம்பர் 10 முதல் 12 வரை ரோயல் கொழும்பு கோல்ப் கிளப்பில் நடைபெற்றது. சாதனை எண்ணிக்கையான 116 கனிஷ்ட கோல்ஃப் வீரர்கள் பங்குபற்றிய இந்த வருடத்தின் போட்டித் தொடரானது இலங்கையில் கோல்ஃப் விளையாட்டின் பிரபல்யத்தையும் அது தொடர்பில் இளம் வீரர்களின் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டியது.

சம்பியன்ஷிப் தொடரின் மிகவும் போட்டிமிக்க பிரிவான 15 முதல் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான தங்கப் பிரிவில் ஜெவான் சதாசிவம் மொத்தமாக 214 ஓட்டங்களைப் பெற்றார். 13 முதல் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான தங்கம்,வெள்ளிப் பிரிவுகளில் கயா தலுவத்த வெற்றி பெற்று மொத்தமாக 212 புள்ளிகளைப் பதிவு செய்தார்.

# சம்மாந்துறை றோயல் லைன்ஸ் அகடமி அணி வெற்றி

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)



அட்டாளைச்சேனை உதைபந்தாட்ட அகடமி நடத்திய உதைபாந்தாட்ட சுற்றுப் போட்டியில் சம்மாந்துறை றோயல் லைன்ஸ் அகடமி அணி வெற்றி பெற்றது.

அட்டாளைச்சேனை உதைபந்தாட்ட அகடமியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெசீல் ஆசிரியர் தலைமையில் அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கிடையிலான இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை உதைபந்தாட்ட அகடமி அணியை 4 : 1 என்ற கோல் அடிப்படையில் வீழ்த்தி சம்மாந்துறை றோயல் லைன்ஸ் அணி வெற்றிபெற்றது.

# விளையாட்டுத் துளிகள்

★ வெஸ்ட் இண்டீஸ் அணியுடனான முதல் ஒருநாள் போட்டியில் 34 ரன்கள் எடுத்த ஹர்மன்பிரீத் கவுர், மகளிர் ஒருநாள் போட்டிகளில் கேப்டனாக 1000 ரன்களைப்பெற்ற 2-வது இந்திய கேப்டன் என்ற பெருமையைப் பெற்றார். இவர் கேப்டனாக 26 போட்டியில் மொத்தம் 1,012 ரன் எடுத்துள்ளார். ஏற்கனவே மிதாலி ராஜ் (5319 ரன், 155 போட்டி) இம்மைல்கல்லை எட்டினார்.

★ ஐ.சி.சி. யின் புதிய ரி 20 பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் வெஸ்ட் இண்டீஸ் வீரர் அக்கேல் ஹொஸைன் (707 புள்ளிகள்) முதல் முறையாக முதல் இடத்தை பிடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளார். அதாவது ரி20 தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த முதல் வெஸ்ட் இண்டீஸ் வீரராகவும் அவர் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். இந்த பட்டியலில் ஆதில் ரஷீட், வனிந்து ஹசரங்க ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

★ இலங்கை அணியின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் அசித்த பெர்னாண்டோ இங்கிலாந்தில் நடைபெறவுள்ள கௌண்டி சம்பியன்ஷிப் தொடரில் கிளாமோர்கன் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். 27 வயதான இவர், இலங்கை கிரிக்கெட்டின் தடையில்லா சான்றிதழுக்கு (என்.ஓ.சி) உட்பட்டு, 2025 பருவகாலத்தின் ஆரம்பத்தில் டிவிஷன் 2 பிரிவுகளுக்காக நடைபெறுகின்ற முதல் 7 கௌண்டி சம்பியன்ஷிப் போட்டிகளில் கிளாமோர்கன் அணிக்காக விளையாடவுள்ளார்.

★ இந்திய வேகப்பந்து வீச்சாளரான அங்கித் ராஜ்பூட் தனது 31 வயதிலேயே இந்திய கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தெரிவித்துள்ளார். எனினும் உலக கிரிக்கெட்டில் மற்ற வாய்ப்புகளை தேடுவதாக தெரிவித்துள்ளார். ஐ.பி.எல். தொடரில் சென்னை, பஞ்சாப், ராஜஸ்தான், கொல்கத்தா ஆகிய அணிகளில் இடம்பிடித்துள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 29 போட்டிகளில் 24 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். அண்மையில் நடைபெற்ற மெகா ஏலத்தில் இவரை எந்த அணியும் ஏலம் எடுக்கவில்லை.

★ மலேசியாவில் நடைபெற்ற முதலாவது ஐ.சி.சி. மகளிர் (19 வயதுக்குட்பட்ட) இளையோர் ஆசியக் கிண்ண தொடரின் இறுதிப்போட்டியில் பங்களாதேஷை வீழ்த்தி இந்திய சம்பியன் பட்டம் வென்றது. இதேவேளை அண்மையில் நடைபெற்ற ஆடவர் இளையோர் ஆசியக் கிண்ணத்தை பங்களாதேஷ் அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று மாத ஓய்வுக்கு முகங்கொடுத்துள்ள ஸ்டோக்ஸ்

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் உபாதைக்குள்ளான பென் ஸ்டோக்ஸின் காயம் தீவிரமடைந்துள்ளதால் அவர் குறைந்தது 3 மாதங்கள் வரையில் ஓய்வில் இருக்க வேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வெள்ளைப்பந்து தொடரில் விளையாடவுள்ளது. இத்தொடர்களுக்கான ஜோஸ் பட்லர் தலைமையிலான இங்கிலாந்து அணியை அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்தது. இதில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நட்சத்திர ஆல் ரவுண்டர் பென் ஸ்டோக்ஸுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

முன்னதாக சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாடுவேன் என பென் ஸ்டோக்ஸ் உறுதியளித்திருந்த நிலையில், இத்தொடருக்கான இங்கிலாந்து அணியில் அவரது பெயர் இடம் பெறாதது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை வழங்கியது.

அண்மையில் நிறைவடைந்த நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பந்துவீசும் போது காயமடைந்த பென் ஸ்டோக்ஸ், களத்தில் இருந்து பாதியிலேயே வெளியேறினார். இதையடுத்து அவருக்கு ஸ்கேன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த சோதனையின் முடிவில் ஸ்டோக்ஸின் காயம் தீவிரமடைந்துள்ளதாகவும் அவர் காயத்தில் இருந்து குணமடைய குறைந்தது 3 மாதங்கள் ஆகும் என்றும் வைத்தியர்கள் கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் பென் ஸ்டோக்ஸ் தனது இடது காலில் ஏற்பட்ட தொடை காயம் காரணமாக இலங்கைக்கு எதிராக சொந்த மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் தொடரிலும் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதல் போட்டியிலும் விளையாடவில்லை. அதன்பின் கம்பேக் கொடுத்த பென் ஸ்டோக்ஸ் தற்போது மீண்டும் காயத்தை சந்தித்துள்ளது அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7